

## செல்வன். டென்ஸ்டன் ரெஜினோல்ட்


## வயலின், குரலிசை

# அரங்கேற்ற மலர்

25.02.2012
கலைக்காவிரி வளாகம்
திருச்சிராப்பள்ளி - 1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலரின் இதழ்கள்


- கல்லூரி நிகழ்வுகள்
- அரங்கேற்ற நிகழ்வுகள்
- ஆசிச்செய்திகளும், வாழ்த்துக்கவிதைகளும்
- மொட்டின் மலர்வுப்படங்கள்
- அர்ப்பண மாலையில் அழகுசேர்த்த கலைஞர்கள்
- தாளங்கள்
- நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









செல்வன். டென்ஸ்டன் ரெஜினோல்ட்

## வயலின், குரலிசை

# அரங்கேற்ற மலர்



MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 01.10.1977 | - | கலைக்காவிரி உதயம் |
| 12.06.1978 | - | திரைப்பட பிரிவு தொடக்கம் |
| 22.12.1978 | - | முதல் ஒலிநாடா வெளியீடு |
| 27.12.1978 | - | நடனகக்குழுவின் முதல் மேடை நிகழ்ச்சி |
| 21.10.1980 | - | நிலைப்பட பிரிவு திறப்பு |
| 21.09.1981 | - | நடனக்குழுவின் முதல் வெளிநாட்டுப்பயணம் |
| 23.11.1981 | - | வானொலிப் பிரிவு ஆரம்பம் |
| 13.01.1982 | - | முதல் பல்கலை ஒலி, ஒளி மேடை நிகழ்ச்சி |
| 14.01.1982 | - | புதுப்பிக்கப்பட்ட நிர்வாக கட்டிடத்திறப்பு |
| 14.01.1982 | - | நவீன ஒலிப்பதிவுக்கூடத் திறப்பு |
| 16.01.1982 | - | இயேசு காவியம் வெளியீடு, தமிழக முதல்வர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் பங்கேற்பு |
| 05.09.1982 | - | சமூகத் தொடர்பு விழிப்புணர்வு பாசறைகள் தொடக்கம் |
| 29.09.1982 | - | போப்பாண்டவருக்கு இயேசு காவியம் |
| 01.10.1982 | - | கலைக்காவிரித் தென்றல் மாதச் செய்தி மடல் |
| 19.12.1982 | - | நாடகத்துறையின் முதல் மேடை நிகழ்ச்சி |
| 01.10.1983 | - | நாட்டியப்பள்ளி (பகுதிநேரம்) தொடக்கம் |
| 15.10.1987 | - | போப்பாண்டவர்க்கு முன் நடன நிகழ்ச்சி |
| 02.01.1988 | - | பகுதி நேர நடனத்திற்கான முதல் சான்றிதழ் வழங்கும் விழா |
| 24.07.1988 | - | முழு நேர பரத நாட்டியப் பட்டயபயிற்சி |
| 24.07.1988 | - | இசைப்பள்ளி (பகுதி நேரம்) தொடக்கம் |
| 23.02.1989 | - | கலைஞர்களுக்கான கலைக்காவிரி விருது. |
| 26.08.1989 | - | ART FORUM தேசிய செயலகமாக கலைக்காவிரி. |
| 17.02.1990 | - | பள்ளி மாணவ கலைஞர்களுக்கான சுழற் கேடயங்கள் |
| 04.07.1990 | - | நாட்டிய பல்கலைக்கழக பட்டயப்பயிற்சி |
| 29.09.1990 | - | கிறிஸ்துவ வழிபாட்டில் இந்திய நடனங்கள் |
| 12.04.1991 | - | அகில உலக சிறுவர் மாநாட்டில் இசை - நடன மாணவர் பங்கேற்பு (பிரான்ஸ்) |
| 17.01.1992 | - | கலைக்காவிரியில் திருவள்ளுவர் மாநாடு |
| 13.06.1992 | - | கும்பாபிஷேக விழாவில் நடன நிகழ்ச்சி |
| 03.08.1992 | - | இசை பல்கலை கழக பட்டயப்பயிற்சி |
| 15.09.1993 | - | நாட்டிய பல்கலைக்கழக முதுநிலை பட்டயம். |
| 30.11.1994 | - | U-MATIC ஒளிப்பதிவுக்கூடம் ஆரம்பம். |
| 15.02.1995 | - | UDA/OCIC தேசிய மாநாடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 10.05.1996 | - | கலைக்காவிரியை நுண்கலைக் கல்லூரியாக தமிழக முதல்வர் டாக்டர். ஜெ.ஜெயலலிதா உயர்த்தினார். |
| 16.07.1997 | - | ஒருங்கிணைந்த இளநுண்கலை பட்டப்படிப்பு |
| 15.05.1998 | - | கலைத்தொடர்பு நிலையமும், கல்லூரியும், தனித்தியங்கத் தொடங்கின. |
| 24.07.1999 | - | முது நுண்கலைப்பட்டப்படிப்பு |
| 13.03.2000 | - | பரதத்திற்கான முதல் பட்டத்தை டாக்டர். கலைஞர் அளித்தார். |
| 13.03.2000 | - | நடனக்குழுவின் ஆயிரமாவது நிகழ்ச்சி |
| 18.08.2000 | - | அரசு நிதி உதவி பெறும் கல்லூரியாக அங்கீகாரம் |
| 26.11.2000 | - | 2000-ஆம் ஆண்டின் சிறந்த கலை நிறுவனமாக தமிழக அரசின் அங்கீகாரம் |
| 01.10.2001 | - | கல்லூரிச் சிற்றாலயம் புனிதப்படுத்தப்பட்டது. |
| 01.10.2001 | - | கலைத்தொடர்பு நிலையத்தின் புதிய கட்டிடத் திறப்பு |
| 01.10.2001 | - | புதிய திறந்தவெளி அரங்கம் அர்ப்பணிப்பு |
| 12.12.2002 | - | வெள்ளி விழாவுக்கான சிறப்பு தபால் உறை |
| 13.12.2002 | - | தமிழக பரத நாட்டியத்திற்கான முதல் முதுநிலைப் பட்டம் |
| 14.12.2002 | - | நுண்கலைக்கான நுண்கலை மாளிகை அர்பணிப்பு |
| 14.12.2002 | - | உள் அரங்கம் திறப்பு |
| 14.12.2002 | - | கிராமிய இசையில் இயேசுவின் சரிதம் வெளியீடு |
| 14.12.2002 | - | பரதத்தில் முனைவர் (PH.D) பட்டத்திற்கான ஆய்வு மையம் தொடக்கம் |
| 17.01.2003 | - | இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் வருகை |
| 03.09.2004 | - | இசையில் முனைவர் (PH.D) பட்டத்திற்கான ஆய்வுத்துறை |
| 16.11.2004 | - | பல்கலைக்கழக வளாகம் கடந்த பரதநாட்டிய பட்டப்படிப்பு |
| 16.10.2006 | - | அனைத்துக் கல்லூரி முதல் செவ்வியல் கலை விழாப் போட்டி |
| 08.02.2007 | - | தேசிய அளவிலான இந்திய இசை நடன முதல் கருத்தரங்கு |
| 28.03.2007 | - | தேசிய தர நிர்ணயக்குழுவின் உயர்த்தகுதி (தரம் - A) |
| 24-25.03.2007 | - | உலக அளவிலான முதல் இசைக்கருத்தரங்கம் |
| 24.08.2007 | - | தமிழக அரசின் சிறுபான்மை தகுதி பெற்றது. |
| 24.01.2008 | - | இசை, நடனத்திற்கான உலகளாவிய முதல் கருத்தரங்கம் |
| 01.05.2008 | - | நுண்கலைப்பள்ளியில் கோடைப்பயிற்சியின் துவக்கம் |
| 24.06.2008 | - | இசைக்கான ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பு |
| 11.03.2009 | - | கலையூறும் காவிரி எனும் கலைவிழாவின் துவக்கம் |
| 04.04.2009 | - | இசையில் குறள் குறுந்தகடு வெளியீடு கலைச்சாரல் புத்தகம் வெளியீடு |
| 20.10.2009 | - | நிறுவுனர் தந்தைக்கான நினைவு மண்டபம் திறப்பு |
| 28.02.2011 | - | நடனத்துறையில் முதல் முனைவர் பட்டம் பெறல் |
| 01.04.2011 | - | கலைக்காவிரி நீண்டப்பணியாளருக்குரிய அர்ப்பண விருது |
| 30.01.2012 | - | வீரமாமுனிவர் இலக்கியப் பேரவை துவக்கம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kalai Kaviri at her Birth - 1977



From Modesty to Modernity - 1982



All the World is a Stage



Soul's Search - The College Chapel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dancing To the Design Of a Dreamer..!
Dance Section



made of Melodies, Not of Bricks !
Music Section



A Matching Monument to Kalai Kaviri's Soaring Succes - 2002
New Main Building of the College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



கொன்சி - றெஜினோல்ட் தம்பதிகளின் மகன் டென்ஸ்டன் வயலின், இசைக்குரல் முறைப்படி பயின்று தமிழகத்தில் கலையில் பெயர் பூத்த கலைக்காவிரில் அரங்கேற்றம் நடத்துவதையிட்டு மனங்கொள்கிறேன்.

ஜேர்மனியில் நான் வாழ்ந்த காலத்தில் அவரது இசை நாட்டத்தை ஆறு வயதில் அளந்து கொண்டேன். பெற்றோரின் தொடர்ச்சியான உந்தலும், ஆசிரியர்களின் நெறியாள்கையும் அவரது பாரிய வளர்ச்சிக்கு கைகொடுத்தது. 2007 ஐரோப்பாவில் ஏழுநாடுகளுக்கிடையிலான இன்னிசைக்குரல் போட்டியில் முதலிடம் பெற்றது இவரது இசைக்குரல் ஆளுமைக்கு கட்டியம் கூறுகிறது.

இயல், இசை, நாடகம் (கூத்து) இவற்றை முத்தமிழ் என்கிறோம். இம்மூன்றிற்கும் அடிப்படை இலக்கணமுண்டு. தமிழிசை தொல்காப்பியத்தில் இசை இலக்கணமாகத் தொடங்குகிறது. அதற்கு முன் தமிழிசை இலக்கியங்கள் வெகுவாக இருந்துள்ளது. இசை என்னும் ஆலமரம் தொல்காப்பியத்தில் வேரூன்றி, சங்க இலக்கிய காலத்தில் முளைக்கிளம்பி, சிலப்பதிகார காலத்தில் நல்ல பெரிய அடிமரமாகி, கீர்த்தனைக்காலத்தில் பூத்துக் காய்த்துக் கனிந்து நிற்கிறது. தற்பொழுது உலகெங்கும் இசைத்தமிழ் மணம் பரப்பிவருகிறது. புலம்பெயர்ந்தவர்கள் இயல்தமிழாகிய பேச்சுத்தமிழில் பாண்டித்தியம் பெறாவிடினும் இசைத்தமிழில், கூத்துத்தமிழில் வல்லுனர்களாக வளர்வது தமிழ் எந்தவடிவிலும் புலம் பெயர் நாடுகளில் தளைத்து நிற்கும் என்பதில் நமபிக்கை கொள்கிறேன். இம்முயற்சியில் ஈடுபாடு கொள்ளவைத்த டென்ஸ்டனின் பெற்றாரை வாழ்த்துவதில் நிறைவடைகிறேன்.

இசையில் வல்லுனர்களை பாணர் என்றழைப்பர். யாழ்நரம்பு வழி இசைமீட்கிறவர்கள் யாழ்ப்பாணர் என்றழைத்தனர். நரம்புவழி இசைமீட்டவர்கள் இருப்புக்கொண்ட யாழ்ப்பாணத்தில் இருந்து வயலின் பாணர் டென்ஸ்டனை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். இசையினால் தமிழ் உணர்வுகளை தட்டி எழுப்பவேண்டும். இசைவழி அவரது தமிழ்ப்பணி, இறைபணி தொடர எனது ஆசீர்கள்.

**அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம்**
இயக்குநர் - நெய்தலம்,
யாழ்ப்பாணம் - இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகிறேன்... வாழ்த்துகிறேன்

ஜேர்மனியில் வசிக்கும் செல்வன். டென்ஸ்டன் ரெஜினோல்ட் வயலின் இசையிலும், வாய்ப்பாட்டிலும் சிறப்பான முறையில் முன்னேற்றம் கண்டு, இன்று அரங்கேறுவதை கேள்விப்படும் போது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

இவரின் பெற்றோர் திரு. ரெஜினோல்ட் அம்புறோஸ், திருமதி. கொன்சி ரெஜினோல்ட் இவர்களை நான் நன்கு அறிவேன். ஜேர்மனியில் நான் பணியாற்றிய காலங்களில் இவர்களின் கலைஆர்வம், சமூகப்பணிகளில் இவர்கள் காட்டிய அக்கறையால் நான் மிகவும் கவரப்பட்டுள்ளேன். செல்வன். டென்ஸ்டன் ரெஜினோல்ட் அவர்களின் குடும்பம் கலைக்குடும்பம் என்று சொன்னால் அது தவறில்லை. இவரின் தந்தையார் சிறந்த நடிகரும், பாடகரும் ஆவார். இவரின் தாயாரும் சிறந்த நடிகையாவார். எனவே, இவர்களுக்கு பிறந்த செல்வன். டென்ஸ்டன் பூனையாகுமா?

செல்வன். டென்ஸ்டன் ரெஜினோல்ட் 6 வயதில் இருந்து வயலினும், வாய்ப்பாட்டும் கற்று, ஐரோப்பாவில் நடந்த போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களை தட்டிச்சென்றவர். ஜெர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மிக பணியக வெளியீடான இருவெட்டில் பாடியும், அதே பணியகத்தால் மேடையேற்றப்பெற்ற செமிக்கோல் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி செந்நீர் கலசத்தில் பாடியும், நடித்தும் பலரின் பாராட்டைப்பெற்றது எனக்கு நினைவிருக்கிறது. இவர் தன்னுடைய குறிக்கோளை அடைய எடுத்த முயற்சிகளையிட்டு நான் வியப்படைகிறேன்.

இவரின் இந்த முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த பெற்றோரை நான் பாராட்டுகிறேன். நேரடியாக இவரின் அரங்கேற்றத்தில் பங்கெடுக்கமுடியாவிட்டாலும் இவருக்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துதல்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவர்கண்ட கனவு நனவாவதையிட்டு நான் பூரிப்படைகிறேன். செல்வன். டென்ஸ்டன் ரெஜினோல்ட் அவர்களையும், அவரின் பெற்றோரையும் நினைக்கும் பொழுது எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.

கலை என்பது ஒரு பெரும் சமுத்திரம். இச்சமுத்திரத்தில் ஆழமாக நீந்தி இன்னும் நிறைய கற்று கலையில் சூரியன் போன்று பிரகாசித்து, இன்னும் சிறப்பாக வளர நான் ஆசிக்கின்றேன்.

ஆசியுடன்

**அருட்பணி. J.X.பேர்னாட் றெக்னோ**

இயக்குனர், கரிதாஸ் யூடெக் நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆண்டுகால தொடர்பில் டென்ஸ்டன் பற்றி நான் அறிந்தவை :

## டென்ஸ்டன் றெஜினோல்ட் :



இத்தாலியின் அசிசி நகர புனித பிரான்சிசை நினைவு படுத்துபவர் வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வள்ளல் பெருமானின் வாரிசோ என்று எண்ணும் வகையில் சிறிய உயிர்களிடத்தும் அதிக அன்பு காட்டக்கூடிய இவர், பல திறமைகள் இயற்கையாக கைவரப்பெற்றவர். "**அயல் யாழ்**" என்ற வயலினைத் தமது 6வது வயதிலேயே திரு. உமா காந்தனிடமும் அதன் பின் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜான் பிரிட்டோ (முனைவர்) என்பவரிடமும் பயிலத் தொடங்கியவர். பின்னர் மதுரக்குரலோன் எஸ். கண்ணனிடம் வாய்ப்பாட்டை முறைப்படி கற்க ஆரம்பித்தார். **இடது கையால் வில் போடுவது இவரது தனித்திறன்.** இனிமையான குரல்வளமும் பெற்றிருந்தார். 2007-ஆம் ஆண்டு லண்டன் வானொலி நடத்திய ஐரோப்பியர்களுக்கு இடையிலான குரல் தேர்வில் வெற்றி பெற்று **ஐரோப்பிய இன்னிசைக்குரலோன்** என்னும் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர். நடனத்திலும் அவருக்கு ஈடுபாடு உண்டு. ஜெர்மன் நாட்டில் நடத்தப்பட்ட பல போட்டிகளில் பங்கு பற்றி முதல் பரிசுகளை வென்றுள்ளார். சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகளிலும் இவரது திறமை பாராட்டுப் பெற்றுள்ளது. தொடர்ந்து நான்கு ஆண்டுகள் இந்தியா வந்து கலைக்காவிரி நுண்கலைப் பள்ளியின் பட்டயப் படிப்பில் பங்கேற்று இந்த ஆண்டு அரங்கேற்றம் செய்யும் அவரது விடாமுயற்சி, தொடர்ப்பயிற்சி, அர்ப்பணிப்பு, இயல்பான திறமைகள் ஆகியவற்றை மனதார பாராட்டி மகிழ்கிறேன். இவர் தமது திறமைகளை அறிந்து ஊக்குவித்த இவர்களது பெற்றோர்களும் பாடுவதிலும், ஆடுவதிலும், நடிப்பதிலும், அழகுக்கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள்.

தமிழர் தம் கலாச்சாரத்தையும், கலைகளையும் அறிந்து வெளிநாட்டவர் போற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட இவர்களது குடும்பம் பல வளங்களும், நலன்களும் பெற்று சிறக்க மனதார வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடனும் ஆசிருடனும்

முனைவர் **மார்கரெட் பஸ்டின்** FSJ
முதல்வர், கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி, திருச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க ! வளர்க !! வெல்க !!!



தமிழிசையில் புலமை பெற்று அதனை இந்தியாவில் அரங்கேற்றம் செய்யும் டென்ஸ்டன் ரெஜினோல்ட் அவர்களைப் பாராட்டுகிறேன்.

ஆண்டுதோறும் ஜெர்மனியில்இலங்கைத்தமிழர்கள் நடத்தி வருகின்ற கிறிஸ்மஸ் ஒளிவிழாக்கள் இவருடைய பங்களிப்பில்லாமல் சிறப்புறாது என்றால் மிகையாகாது.

1999ம், 2003 ம் ஆண்டு நடந்த அத்தகைய ஒளிவிழாவில் பங்கேற்ற நான் அதன் திருவழிபாட்டு இசையை இயக்கும் பொறுப்பில் இருந்தேன்.

அதில் இவர் என்னோடு இணைந்து மிகச்சிறப்பாகப்பாடி, ஒத்துழைப்பு தந்ததை என்னால் மறக்க முடியாது.

பக்தி இசை, சமூக இசை, தொண்டிசை, நாடகம் போன்றவற்றிலெல்லாம் ஈடுபட்டு சிறந்த கலைச் சேவை புரியும் இவரது பெற்றோர் ரெஜினோல்ட் - கொன்சியைப் போலவே இவரும் தன்னாலான இசைச்சேவையை பல வழிகளிலும் செய்து வருகிறார்.

அதனால் தன் உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் இவர் கடல் கடந்து இங்கு வந்து கடவுள் அருளோடும், கடின உழைப்போடும் இசையை சாதித்து அரங்கேற்றவிழா காண்கிறார்.

இவர் இசையில் மென்மேலும் உயர்ந்து உலகெல்லாம் பேரும், புகழும் பெற்று, அனைத்து நலன்களைம், செல்வங்களயும் அடைந்து வாழ்வாங்கு வாழ ஆசீர்வதிக்கிறேன்.

அதற்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

இவண்.

அருட்திரு. மா.இருதயராஜ்



இடம் : திருமையம்
பங்குத்தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் ஆசியுரை



"தோன்றில் புகழுடன் தோன்றுக அ·.திலார்தோன்றலில் தோன்றாமை நன்று."
என்றவள்ளுவரின்வாக்கியத்திற்கு இணைய இவ்வையகத்தே உதிக்கின்ற ஒவ்வொரு மனிதனும் தான் விரும்புகின்ற ஏதாவது ஒருதுறையில் பயிற்சிபெற்று அதற்குரிய அங்கீகாரம் மக்களால் வழங்கப்படுகின்ற போதுஅதற்குரிய பெருமையை பெறுகின்றனர்.

அந்தவகையில்தங்கள்மகனிடம் இருக்கும் இசைஆர்வத்தினை அறிந்துகொண்டு அவருக்கு இசைக்கலையை முறைப்படி பயிற்றுவிக்கவேண்டும் என்ற ஆவலுடன் செல்வன்: டென்ஸ்டன் றெஜினோல்டை என்னிடம் ஒப்படைத்தார்கள். அவரும் கடந்தபலவருடங்களாக என்னிடம் முறைப்படி இந்த இசைக்கலையைகற்றுவந்தார்.

இக்கலையை நன்குகற்று தேர்ச்சி பெறவேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் கொண்டமாணவர்களுள் முதன்மையானவராக திகழ்ந்தார். தனது உடல் நிலைகாரணமாக இந்தியாசென்றவேளையில் அங்கும் தனது நேரத்தினை இசைக்காக அர்ப்பணித்து தனது இசையறிவை மேலும் வளர்த்துக்கொண்டார். அதனையிட்டுநான் மிகவும் மகிழ்ச்சிஅடைகின்றேன். முக்கியமாக இவரதுஆர்வமும், பெற்றோரின் ஊக்கமும்சேர்ந்தே இவரை இன்று அரங்கேற்ற நிகழ்வுக்கு கொண்டு சென்றுள்ளது.

புலம்பெயர்வாழ்தமிழ் மக்கள் தங்களது பாரம்பரிய இசைக் கலைகள் அழிந்து விடாது பேணிக்காத்துவருகின்றனர். அதற்கு இவ்வாறானநிகழ்வுகள் சாட்சியமாக திகழ்கின்றது.

அவரது இந்த அரங்கப்பிரவேசம் சிறப்பாக அமைய எனது நல்லாசிகளுடன் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.அரங்கேற்றமென்பதுகலையின் ஆரம்பம். மாணவர்கள் தங்களது இசைப்பயணத்தின் முதல் படியினை எடுத்துவைப்பதன் முதல்நாளாகும். இத்துடன் நின்றுவிடாது இக்கலையை தொடர்ந்துகற்றுமென்மேலும் தேர்ச்சிபெறஎல்லாம்வல்ல நல்லூர் கந்தனைவேண்டுகின்றேன்.

ஆசிரியர்
"மதுரக்குரலோன் எழிலிசைவேந்தன்"
ஜேர்மன் S.கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிக்கவி



ஈழத்தமிழரென்றால் ஈரேழு உலகும் அறியும்
வாழ தவித்தாலும் – தமிழ் வாடத்தாங்கமாட்டார்

சூரப்புலிகளென்பார் சுந்தரத் தமிழரென்பார்
பாருக்குள்ளே அவர்களுக்குப் பலவாறு பேர்களுண்டு – அதை
நேருக்கு நேர் எண்பிக்க நெஞ்சமெல்லாம் இனிக்க – தன்
வீரத்தமிழிசை விருந்தை அரங்கேற்றவரும் டென்ஸ்டோனை
தூரத்து ஜேர்மனியில் என்னிடம் துடிப்புடன் இசைபயின்ற
தீரத்தமிழ் மாணவரை திசையெல்லாம் இசைபாடி
இசைபட வாழ்கவென்று முதற்கண் வாழ்த்துகின்றேன்

ஆறாம் அகவை தொட்டோ ஆர்வமாய் இசைகற்றார் – ஊரில்
தேரும் திருநாளுமென்றால் திரளும் பக்தரெல்லாம் – இவர்தம்
சீரும் சிறப்புமான இசைச் சேவையில் மகிழ்ந்தோராய்
நூறும் நோக்கும் பெறுவாய் நுவின்றோம் வாழ்த்தி என்பார்

IBC வானொலியில் – இரண்டு ஆயிரத்தேழாம் ஆண்டு
மெய்பேசும் குரலால் பலரை மிஞ்சும் படிப்பாடிய இவர்
ஐரோப்பிய இன்னிசைக்குரல் என்ற அரும்பதக்கம் பெற்றுயர்ந்தார்

பொய்பேசிப்பழக்கமில்லை (எனக்கு) புதுயுகக் கலைஞர் இவர்! ஒரு
கைக்காசும் வேண்டாமல் கச்சேரிகள் செய்தளித்துப்
பிறர்வாசி தீரச்செய்துள்ளார் – நிறை இறையாசிர் இவர்பெறுக

அமோகமாய் தமிழ்பாடும் அருந்தமிழிசை அறிஞர்
ரெமோ எனும் இசைக்குழுவில் ஐமாய்கின்றார் ஜேர்மனியில்
மேடையிலே தன் மகனை மேதையென ஏற்றிவைக்க – கலைக்
கூடலெனும் தமிழகத்தே கூட்டிவந்து பயிலவைத்து – அரும்
பாடுபட்ட இவர் பெற்றோர் பாட்டாளி கொன்சி ரெஜினோல்ட்
நீடூழி வாழ்க என்று நெஞ்சார வாழ்த்துகின்றேன்

வலக்கை விரல்களாலே வயலினிசைக்கும் இப்புதுமை
விளக்கைப் பலர் காண ஏற்றி வைக்க வகை செய்த
கலைக்காவிரி வாழ்க! – அதன் கண்போன்ற முதல்வர் – அருள்
கலைச்செல்வி டாக்டர் மார்கரெட் காலமெல்லாம் வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து வா தமிழா ! என்றிவர் எழுச்சியுடன் பாடுங்குரல்
எங்கெங்கும் கேட்குதின்று இணையத்தின் வாயிலாக

பாடும் பாதங்களெனும் சிடி யிலும் இவர் நன்கு
பாடிய நற்செய்திப்பா பாரெங்கும் கேட்குது பார்!

எழுந்துவா தமிழா என்று அழைக்கின்றேன் நானும் இன்று
பழந்தமிழ் கதைகள் பேசிப் பண்ணிரகாண்ட நம் தமிழரை
எழுச்சி கொள்ளச் செய்ய எக்காளமாய் எழுந்து வா!

ஏழிசை தீபமேற்றி - நம்மவர் இருள் போக்க எழுந்து வா! - வில்
யாழிசை மீட்டி மீட்டி - எம்மை ஒருங்கிணைக்க எழுந்துவா

தாழிசையாய் தத்தளிக்கும் - நம் தமிழிசை மீட்க எழுந்து வா
வாழிசையாய் பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்தி மகிழும்



**ஜான் பிரிட்டோ,** திரு இசைப்புலவர்
1/25, பூங்கா வீதி, முகையூர் - 605755.
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



செல்வன். டெனிஸை எனக்கு எட்டு ஆண்டுகளாக தெரியும். அவர் என்னிடம் 2004-ஆம் ஆண்டு வயலின் பயிற்சி பெற வந்து சேர்ந்தார். ஏற்கனவே அவர் வயலின் **(இடது கையால் வாசிக்கும் திறமையை)** கற்றுக் கொண்டு வந்ததினால் மேற்பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கு எனக்கு எந்த கஷ்டமும் ஏற்படவில்லை. கொடுத்த பாடத்தை உடனே கிரகித்து வாசிக்கும் திறமையை அவரிடம் நான் மிகவும் கவனித்தேன். அவருடைய நினைவாற்றல், திறமை, பணிவு, சந்தேகங்களை என்னிடம் கேட்டு அதை தெளிவாக வயலினில் வாசிக்கும் முறை அவருடைய ஞானபலத்தைக் காட்டுவதாக உள்ளது. அரங்கேற்ற அரங்கில் அவருடைய திறமையை வெளிப்படுத்துவார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். சங்கீதம் எல்லோர்க்கும் இலகுவாக கிடைக்கக்கூடியது அல்ல. ஆனால் அவருடைய உழைப்பும், கிரகிக்கும் தன்மையினால் வயலின் வாசிப்பதிலும் வாய்ப்பாட்டுப் பாடுவதிலும் அவருடைய நிலை மேலோங்கி உள்ளது. இறைவன் அருளால் இவ்விரு துறைகளிலும் இன்னும் வளர்ந்து பல இசை நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய வல்லமை உள்ளவராக உயரமாணவர் டெனிஸை என் இதய பூர்வமாக வாழ்த்தி எனது நல்லாசிகளை அவருக்கு வழங்குகிறேன். மேலும் அவருக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும், இசை வளர்ச்சியையும், கொடுக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

வாழ்க அவர் இசை
வளர்க அவருடைய கலைத்திறமை

திருச்சிராப்பள்ளி
தமிழ்நாடு



இங்ஙனம்
பேராசிரியர் (வயலின்)
**ச. ராஜராஜேஸ்வரி**
கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியை வாழ்த்து



மாணவர் டெனிஸை நான் முதன் முதலாக 2004-ல் சந்தித்தேன். அவரது பணிவு, பாடங்களை மனப்பாடம் செய்யும் ஆற்றல் இவைகள் அவரிடம் நான் கண்ட சிறப்புகளாகும். தமது பள்ளிப் படிப்புகளோடு நின்றுவிடாமல் இசைக்கலையையும் கற்க வேண்டுமென்ற பேரார்வத்தில் நெடுந்தொலைவு வந்து, இங்கு தங்கி சக மாணவர்களோடு நட்புடன் பழகி, கடுமையான பயிற்சியையும் மேற்கொண்டு வெற்றி கண்டுள்ள அவர் பாராட்டுக்குரியவர். ஆசிரியர் கற்றத்தரும் பாடல்களோடு மட்டுமல்லாது வேறு பல பாடல்களைக் கேட்டும், பாடியும் பயிற்சி செய்யும் இயல்புடையவர். இவரது இசையார்வத்தை திறம்பட வெளிக்கொண்டுவர முயற்சித்து மேலும் இவரை ஊக்குவிக்கும் இவரது பெற்றோர் போற்றுதலுக்குரியவர்கள்.

அன்பும், பண்பும், ஞானமும் உடைய மாணவர் டெனிஸ் இசையுலகில் பல சாதனைகள் புரிய அவருக்குத் தேவையான உடல், உள உறுதியைத் தந்தருளுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நலம் பெறுக!

**வே. வேங்கடலெட்சுமி**
உதவிப் பேராசிரியர் (இசைத்துறை)
கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



இசை என்னும் அழகிய தடாகத்தில் புதிதாய் பூக்கப் போகும் அல்லி மலராய் செல்வன் டென்ஸ்டன், அரங்கேற்றம் என்ற முதல் படியில் தனது காலடியை எடுத்து வைக்கும் வேளையில் எல்லா வல்ல இறைவன் நிறைவான ஆசீர்வழங்குராராக.

டென்ஸ்டன் இசைப் பாடங்களை கற்றுக்கொள்ளும் பொழுது, மிகுந்த ஆர்வமுடன், முழுமையாக கற்றுக்கொள்வார். கற்றுக் கொண்ட பாடங்களை கடின உழைப்புடன் பயிற்சி செய்வார். ஒரு நல்ல மாணவருக்குரிய அனைத்து நற்குணங்களையும் கொண்டுள்ளார்.

குரலிசை, வயலின் ஆகிய இரண்டு கலைகளையும் இரு கண்களாய் கொண்டு இன்னும் முழுமையாக அர்ப்பணித்து கற்றுக்கொண்டு இசை வானில் ஒளி வீசும் நட்சத்திரமாய் திகழ இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்

**D.ஆக்னஸ் ஷர்மீலி**
துணைப் பேராசிரியர்
வயலின் (இசைத்துறை)
கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சியின் பயன்

செல்வன் டென்ஸ்டோன் றெஜினோல்ட், 1994ஆம் ஆண்டு ஜேர்மன் - டோட்முண்ட் நகரில் அமைந்துள்ள நமது கலையகத்தில் தமிழ்மொழி கற்பதற்கு ஆரம்பவகுப்பில் இணைந்து கொண்டார். இசைத் துறையில் நாட்டங்கொண்ட இவர் இதே ஆண்டு வயிலின் இசையைக் கற்றுக் கொள்வதற்காக ஆசிரியர் திரு. உமாகாந்தன் அவர்களின் வகுப்பில் இணைந்து கற்றதுடன் பின்னர் இந்தியாவில் இருந்து வருகை தந்த இசையியலாளர் திரு ஜான் பிரிட்டோ அவர்களிடமும் அவ் இசையைக் கற்றுக் கொண்டார்.

திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமைவரை ஜேர்மன் நாட்டுக் கல்விக்கூடங்களில் கல்விகற்றுவரும் மாணவர்களுள் இவரும் ஒருவர். சனிக்கிழமைகளில் மட்டும் எம்மால் நடாத்தப்பட்டுவரும் மொழி, கலை வகுப்புகளில் இணையும் மாணவர்களின் வாராந்த விடுமுறை நாட்கள் குறைந்துவிடுகின்றன. இப்படியான ஓர் சூழ்நிழலையில் இவரது கல்விப்பயணம் நம் கலையகத்துக்குள் ஆரம்பித்து விரிவுபெற்றது. ஆரம்ப ஆண்டுகளில் வயலின் கற்றுவந்த இவர் துணைப்பாடமாக குரலிசையை ஆசிரியர், தமிழிசை முன்னெடுப்பாளர் சங்கீத பூசணம் திரு. செல்வச்சீராளன் அவர்களிடம் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். இவரது கல்வியானது 2004ஆம் ஆண்டுவரை நமது கலையகத்திற்குள் வளர்ச்சி பெற்றுவந்தது. இக்காலப்பகுதியிற்குள் நாம், அம் மாணவரிடம் கண்டுகொண்ட சிறப்புத்தன்மைகளை இங்கு குறிப்பிட விரும்புவதுடன் மகிழ்வும் அடைகின்றோம்.

தமிழ்மொழி, வயிலின் மற்றும் குரலிசைக் கல்விகளைக் கற்றுக் கொள்வதில் மட்டும் இவரது ஆர்வம் இருந்திருக்கவில்லை. தமிழர்தம் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான கூத்தினை கற்றுக் கொடுப்பதற்கு நாம் ஆரம்பித்தபோது அதனை ஆசிரியர் பாசையூர் யேசுதாசன் அவர்களிடம் மிகவும் ஆர்வத்துடன் கற்று மேடைகளில் நடித்துப் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். ஆண்டுதோறும் நம்மால் நடாத்தப்படும் கலைநிகழ்வுகளில் தனது ஆடற்கலையை வெளிப்படுத்தியும் சிறப்பாகப் பாடியும் மாணவர்களது, ஆசிரியர்களது மனங்களில் அவருக்கான ஓர் இடத்தினை எடுத்துக் கொண்டார்.

நம் கலையகத்தில் தமிழ்மொழி மற்றும் கலை வகுப்புகளை நடாத்தி வந்த நாம், நம் மாணவர்களின் ஜேர்மன்மொழித் திறனை வெளிப்படுத்தும் நோக்குடன் 2000ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டு நாடக ஆசிரியை Gabriela Boschmann என்பவரின் உதவியுடன், யேர்மன் மொழியிலான NAIBARA எனும் நாடகம் ஒன்றினைத் தயாரித்தோம். இந்நாடகத்தில் பங்கேற்றிய செவ்வன் டென்ஸ்டோன், நடிப்புத்துறையிலும் தான் ஒரு சிறந்த கலைஞன் என்பதை அடையாளப்படுத்திக் கொண்டதுடன் வரவேற்பினையும் பாராட்டுக்களையும் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைக் கலைத்துறையிலும் ஈடுபாட்டினைக் கொண்டிருந்த செல்வன் டென்ஸ்டோன் ஓர் பண்பான, பொறுமையான, கற்றுக் கொள்ளும் ஆர்வம் கொண்ட மாணவன். இவரின் பெற்றோர்கள் இவருக்குப் பின்துணையாக இருந்து வந்ததை நாம் அவதானித்துள்ளோம். நமது கலையகத்தை விட்டு வெளியேறினாலும் தொடர்ச்சியாக அத்துறையினை கைவிடாது இந்தியாவின் பிரபல இசைக்கல்லூரியான திருச்சி கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரியில் அதனை தொடர்ந்து கற்று இன்று தனது திறனை அரங்கில் இசைக்கவுள்ள அம் மாணவனை நினைத்து பெருமை அடைகின்றோம். தொடர்ந்து செல்லவுள்ள இவரின் இசைப்பயணத்தில் தமிழிசையும் வளர்ச்சிபெறும் என்பது எமது திண்ணம்.

தமிழிசை முன்னெடுப்பாளர்களால் எழுதப்பட்ட ஓர் சில நூல்களின் விபரங்கள்:

இராவ் சசாகிப் ஆபிரகாம் பண்டிதர் அவர்களால் எழுதப்பட்ட தமிழிசை ஆய்வு நூலாகிய „காணாமிர்த சகாரம்“, வீ.பா.கா. சுந்தரம் அவர்களின் தமிழிசைச் சொற்களின் வடமொழிச் சொற்கள் அடங்கிய „தமிழிசைக் களஞ்சியம்“, இசையியலாளர் திரு. ஜான் பிரிட்டோ அவர்களால் எழுதப்பட்டு தமிழர் கலையகத்தினால் வெளியிடப்பட்ட „தமிழர் இசையியல் பாகம் 1“, முனைவர் அருட்சகோதரி மார்கரெட் பஸ்டின் அவர்களால் எழுதப்பட்டு தமிழர் கலையகத்தினால் வெளியிடப்பட்ட „தமிழர் இசையியல் பாகம் 2“, சங்கீத பூசணம் திரு. செல்வச்சீராளன் (ஜேர்மனி) அவர்களால் தொகுக்கப்பட்ட „செந்தமிழ் செவ்விசைப்பாக்கள்“ (தமிழர் கலையக வெளியீடு), காலாபூசணம் திரு. எல். திலகநாயகம் போல் (தமிழீழம்) அவர்களால் தொகுக்கப்பட்ட புதிய நோக்கில் செந்தமிழ் செவ்விசைப்பாக்கள்“ (தமிழர் கலையக வெளியீடு) போன்ற நூல்கள் மிகவும் பயன்பாடாக அமையும்.

உமது இசைப்பயணம் வளரட்டும் அதில் தமிழும் தமிழிசையும் விரிவடையட்டும்
தமிழர் கலையகம் டோட்முண்ட் - ஜேர்மனி
மாணவர்கள், உறுப்பினர்கள் சார்பில்
கு.ஜெயகுமாரன்



**Thamilar Kalaiyagam**
Rheinische Str. 130
44147 Dortmund
Germany
E-Mail.: tkdortmund@gmx.de
www@tkdortmund.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துசெய்தி

## Global Tamils Cultural Center e.v.


**Adler Str - 30**
**44137 - Dortmund, Germany**

ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களில், தமது தாய் மொழியாகிய தமிழையும், கலை, கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கங்களையும் இழந்துவிடுவார்களோ என்ற ஐயம் தலைதூக்கிவரும் இவ்வேளையில், இளந்தலை முறையினர் தமிழர் விழுமியங்களை பேணிப்பாதுகாக்க முன்வந்துள்ளது பாராட்டுக்குரியது. இவ்வழியில் ஜேர்மனியில் வாழ்ந்து வரும் செல்வன். டென்ஸ்டோன் ரெஜினோல்ட் அவர்களும் ஒருவர் என்பதை அவரின் கலைப்பயணம் கட்டியம்கூறி நிற்கிறது.

இளவயதிலிருந்தே தாய் மொழிப்பற்றும், தமிழ்க்கலை ஆர்வமும் மிக்கவரான இவர் இன்று குரலிசை மற்றும் வயலின் வாத்தியக்கலைஞராக அரங்கேற்றம் காண்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது. இவர் இக்கலைத்துறையில் புதுமைகள் படைத்து புகழ்பெறவாழ்த்துவதுடன், இவரின் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து ஊக்குவித்த கலைக்குடும்பமான இவரது பெற்றோரையும், ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம்.

நன்றி.

நிர்வாகம்
**உலகத்தமிழர் கலை, கலாச்சார நடுவம்**
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து உரை

Marien Weg - 1
59469 - Ense
Germany



ஒரு கலைக்குடும்பத்தில் வேர்விட்டு முளைத்தசெடி இசைக்கென்று பெற்றோரால் ஏற்றி வைத்த படியில் 1991-ல் எனது கதை, வசன, இயக்கத்தில் உருவான குறும்படத்தில் இரண்டு வயதுக்குழந்தையாக நடித்தவர். விளையும் பயிரை முளையிலேயே தெரிந்து கொள்வது போல் அவரது ஆற்றலை, ஆசையை நிறைவேற்றி வைப்பதிலே கரிசனையாக இருந்து அதில் நடை பயில வைத்த தாய், தந்தையரான ரெஜினோல்ட் - கொன்சி இருவரையும் நான் மனந்திறந்து பாராட்டுகிறேன்.

இசைக்கல்வியை ஜேர்மனியிலே பல வருடங்களாக கற்றவர். அத்துடன் வயலின் வாத்தியக்கலையையும் அங்கிருந்தே ஆரம்பித்தார். இன்னும் இனிமையாகவும், இயல்பாகவும் பாடும் திறமையால் வாய்பாட்டுக்கல்வியும் கற்று ஓரளவு தேறிய பின் தொடர்ந்து தமிழகம் சென்று அங்குள்ள கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரியில் சேர்ந்து சிறப்பு சித்திபெற்று அரங்கேற்றம் செய்யும் உயர்வான நிலைக்கு வந்ததை அறிந்து என்னுடைய வாழ்த்துகளை பெற்றோருக்கும், அன்புப்பிள்ளை டென்ஸ்டன் ரெஜினோல்ட்க்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க கலை

அண்ணாவியர்
கலைமாமணி
**பாசெய்மாநகர் யேசுதாசன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயும் நாடும் நாமும் மகிழப் பாடு



அரும்புத் தமிழ்பேசி அம்மா மடியினிலே
குறும்புகள் பலசெய்து தாவியவன்
பார்த்தவரும் அன்பாய் கன்னத்தில் கிள்ள
பொக்கை வாய்விட்டுச் சிரித்தவன்

பள்ளியில் பலரும் போற்றும் படியாக
துள்ளி விளை யாடியவன்
வெள்ளைத்தோல் கொண்டவர் நடுவே
கறுப்புத்தோலின் வல்லமை காத்தவன்

பெற்றவர் சொல்லே பெருமந்திர மெனவும்
உற்றவர் உறவும் மற்றவர் நட்பும்
உள்ளவரை உறுதியாய் காப்பதெனவும்
மற்றவர்க்கும் மாதிரியாய் நின்றவன்

இறைபணி பொதுப்பணி என்பவை எல்லாம்
குறைவின்றிச் செய்து வந்தவன்
ஆலயத் திருப்பணி சிறப்புறவே தனது
மேலுறு குரல் தந்து பாடியவன்

செம்மொழி கண்ட தமிழ் நாட்டினிலே
இசைமொழி கற்று அரங்கேறுவது
புலம்பெயர் தமிழரின் கலையார்வத்தை
புடமிட்டுக் காட்டும் செயலாகாதோ

வான்மழை பெய்யவும் வாழை பழுக்கவும்
முன்னவர் பாடியது போதும்
தாயும் நாடும் தமிழும் உனைச்சேர்ந்த
நாமும் மகிழப் பாடு மகனே



அன்போடு
இராஜகுமாரன் குடும்பம்
ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெங்கும் புகழ் சாற்றட்டும்!



புலம்பெயர் ஜேர்மன் நாட்டில், கடந்த 25 வருடங்களுக்கு மேலாக எம்முடன் இனிய உறவுகளாக வாழ்ந்துவரும் றெஜினோல்ட்-கொன்சி தம்பதிகளின் ஆருயிர்ப் புதல்வன் டெனிஸ் அவர்களின் அரங்கேற்ற நிகழ்வில், நண்பர்களான நாம் அரங்கில் இருந்து அவரது இசையை அனுபவிக்க இயலவில்லையே என்ற ஏக்கம் இருந்தாலும், டெனிசின் திறமைகள் குறித்தும் அவரை இந்நிலைக்குக் கொண்டு வந்த அவரது குடும்பம் குறித்தும் சில வரிகள் இவ்வேளையில் குறிப்பிட வேண்டியது எனது கடமை என எண்ணுகின்றேன்.

உயிரைக் காக்கவேண்டும் என்ற ஒரே நோக்கில், மேற்புல நாடுகளுக்கு எப்படி, எத்திசையில் செல்கின்றோம் எனத் தெரியாது வந்து புகுந்த ஜேர்மன் நாட்டில், ஒரு நகரத்தில் இருந்து இன்னொரு நகருக்கு அடியெடுத்து வைக்க முடியாது என்ற சட்டம் இருந்த காலத்தில், பல்வேறு ஜேர்மன் நகரங்களில் கத்தோலிக்க மக்கள் சிதறி வாழ்ந்தபோதும், எமது பெற்றோர் எமக்குத் தந்த விசுவாசத்தின் அடிப்படையில் கத்தோலிக்க தமிழர்களாகிய நாம் தொடர்ந்தும் எமது மறையை வளர்த்தெடுக்க வேண்டுமென அருட்காலாநிதி. ஜெயசேகரம் அவர்களின் தலைமையில் எழுச்சிகொண்ட வேளையில் றெஜினோல்ட்-கொன்சி குடும்பம் எம்முடன் இணைந்து புரிந்த கலைப் பணிகளுக்கு இன்று அறுவடை கிடைக்கின்றது என்றால் மிகையாகாது.

ஆம், இவர்கள் தனியாக தமது குடும்பம், தமது எதிர்காலம் என்று மட்டும் பார்க்காது, ஆன்மீகப் பணியத்தின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருந்து உழைத்தவர்கள். பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட பாசறைகள், கலைவடிவங்கள், ஒளிவிழாக்கள், நற்பணிக் கலைமாலைகள், யாத்திரைப் பாடல்குழு, திருப்பயணங்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் குடும்பமாகப் பங்கேற்று தமது பங்களிப்பை நலகியவர்கள். இன்று சில முன்னாள் பணியக இயக்குனர்களின் ஒதுக்குதல்கள் காரணமாக தாமுண்டு, தமது குடும்பமுண்டு என ஒதுங்கி வாழ்ந்தாலும் இவர்கள் குடும்பம் இறைபணியில் ஆற்றிய, ஆற்றிவரும் சேவைகளை என்றும் நாம் மறந்துவிட முடியாது.

அன்பு மகன் டெனிஸ், தமிழ்நாட்டின் புகழ்மிக்க இசைக்கல்லூரியான, கலைக்காவிரியில், எமது அன்பு நண்பர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள், மற்றும் பெருமக்கள் பலர் முன்னிலையில், வாய்ப்பாட்டிலும், வயலின் இசைக்கலையிலும் அரங்கேற்றமாகும் இவ்வேளையில் உம் திறமை மென்மேலும் உலகெங்கும் புகழ்சாற்ற அன்புடன் வாழ்த்துகின்றோம் அதேவேளையில் உமது அமைதியும், இறைப்பற்றும் என்றும் உம்மோடு இருந்து உமது கலை வாழ்வில் உம்மை வளமாக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனின் ஆசீரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

என்றும் அன்புடன்
**கமிலஸ் துரைசிங்கம் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கேற்ற வாழ்த்துக்கள்

கலை இலக்கிய செயற்பாடுகளில் முக்கியமான இருநிலைகள் உண்டு. முதல் நிலையில் ஆக்குவோனின் திறன், ஆளுமை, பயிற்சி, பட்டறிவு தொழில்படுகின்றது. இரண்டாவதில் அவ்வாளுமைத் தொழிற்பாட்டின் பெறுபேறுகளை சபையில், அரங்கில் நிரூபித்து சமூகத்தின் அங்கீகாரம் தேடல்.

அரங்கேற்றம் என்ற தொடரின் அடிச்சொல் அரங்கம் அல்லது அரங்கு, அரங்கம்! சத்திரம், கல்விச்சாலை, கூத்துப்பயிலிடச்சாலை, சீரங்கம், சூதாட்டம், நடனம், நிறம், போர்க்களம், அந்தரங்கம், சபை என்று பல சொற்களில் பொருளுணர்த்தி நின்றபோதும் சபை என்ற சொற்பொருளே இங்கு பொருத்தமானதாக அமைகின்றது அரங்கேறுதல் – சபையேறுதல்.

நீங்கள் முதல்நிலை கடந்து சபையேறும் இரண்டாம் நிலைக்கு உங்களை தயார்படுத்தி நிற்கின்றீர்கள். கலையில் உங்களுக்கிருந்த இயல்பான ஈடுபாடும். அதை செழுமை படுத்தி இடையூறுகளையும் தாண்டிய விடாமுயற்சியும் பெற்றோர், உற்றாரின் தொடர் ஊக்கமும், ஆசியும், கனவும் மெய்ப்படும் வேளையில் எங்கள் மனம் நிறைந்த ஆசியும் வாழ்த்துக்களும்.

சுரங்கள் தேடிக்கற்றவை யாவும்
அரங்கத்தோடு முடியாமல்
வரங்கள் தேடித் திரியும் யோகம்
வாழ்க்கை வரைக்கும் ஒட்டவேண்டும்.



பிரியமுடன்
லியோனிஸ் குணரெட்னம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் பிறவா உடன் பிறப்பே !
நட்பின் இலக்கணமே !!
இசையின் முகவரியே !!!
பாசத்தின் மறு பொருளே !!!!

உன்னை வாழ்த்துவதற்கு அகராதியில் வார்த்தைகள் இல்லை. ஆனாலும்,
முடிந்தவரை வாழ்த்துகிறோம்

இதோ எங்கள் கலைக்கீதம்....

கலை என்பது இரண்டெழுத்து, ஆனால் அது உன் உயிர்மூச்சு
கலை உனக்கு கைவந்த கலை
வயலின், குரலிசை இவை கலையில் நீ பின்னிய வலை
நீ கற்றுக்கொண்ட கலை
நாங்கள் என்றும் வாங்குமுடியாத உயர்ந்த விலை
துன்பங்கள், துயரங்கள் பல வந்தாலும்
கலையில் நீ கலைஞர் ஆக உருவெடுத்த சிலை
நீ துளித்துளியாக கற்ற கலை 25.02.2012 சனிக்கிழமை அன்று
கலைக்காவிரியில் பொழியுமாம் பெரிய மழை
இந்த கலைவாழ்க்கையில் உனது ஆர்வம் என்றும்
பெருக்கெடுத்துக் கொண்டிருக்கும் கடல் அலை
நீ கலை கற்க வந்த ஊராம் எங்கள் காஜாமலை
நம் நட்பு என்றும் உடைக்க முடியாத பாசமலை
சூறாவளி போல் சுழன்று, சுழன்று காற்கு அடித்தாலும்
அந்த சூறாவளியில் புகுந்து உன் இசையினால்
அனைவரின் மனதைக் கவர்ந்த ஜேர்மன் சொந்தமே!
நீ வாழ்க ! உன் கலை வாழ்க !! என



பல்லாண்டு வாழ வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்

என்றும் உன் நெஞ்சில் வாழும்

**Trichy - Gihilli Borthers**

**K. பிரபு,** DEEE.,BCA., **K. கார்த்திக்,** DCE., **K. ராஜேஷ்,** M.Sc.,(IT), **S. ஆனந்த்,** DCE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய இசைஞ்ஞனே...



கலைமகள் மடி தவழ்ந்து
கன்னித்தமிழ் மகள் அடி அணைத்து
இசைமகளை வசைப்படுத்தி
இனிய ஒரு உரு எடுத்தாய்

சுரம் தவழும் சுதி பிடித்து
சுந்தரமாய் வில் எடுத்து
அந்தரத்து மேல்ஸ்தாயி
அதிசயமாய் பிடிப்பன் நீ

நால் நரம்பேற்றி நல் இசையை
நயமுடனே விருந்தளிப்பாய்
நர்தனகுரல் வளைத்து
நல் ஓசை சுவை தருவாய்



எத்தனை கலைகள் உந்தன் உருவில்
அத்தனை கலைகளுக்கும் நீ மன்னனாய்
சிலை வடிக்கச்சென்றால் – உன்
சிந்தனையில் எழுகிறது பலகாவியம்

சித்திரம் வரையச் சென்றால்
சரித்திரம் படைக்கின்றது உன் வண்ணம்
நித்தம் உன் நந்தவனத்தில்
நறுமண மலர் அணிவகுப்பு

அன்னை கலைவாணியின் வாரிசே
ஆயகலை அறுபத்து நான்கும்
ஆனந்தம் கொண்டாடுகின்றது
அன்பாய் நீ அணைக்கையில்

நல்ல நண்பனே இனிய இசைஞ்சனே
நட்பின் இலக்கணமே டென்ஸ்டன்
நீ என்றும் இன்பக்கலை ஊட்டி
இனிது வாழ்க கலைமகனாய்....

என்றும்...என்றென்றும்...
**வி.பிரமீன்** B.A.,Mucic



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த தம்பிக்கு


என் உடன் பிறவா அன்புத்தம்பி!

உன் புன்சிரிப்பும், அமைதியும், அறிவுத்திறனும் என்னைக் கவர்ந்த விஷயங்கள். நீ வீட்டில் பாடும் பொழுது பல தடவை என் கண்களில் ஆனந்தக்கண்ணீர் நிறைந்திருக்கிறது. பூரித்திருக்கிறேன்.

டெனிஸ், எதிர்காலத்தில் நீ உன் வாழ்க்கைப் பாதையில் வானமளவு உயர்ந்து, சூரியன் போல் பிரகாசித்து இசையை மழையாக பொழிந்து பலரை மகிழ்வித்து பல கச்சேரிகள் நடாத்தி இசைமேதையாக உடல் நலத்துடன் வாழ வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

நீ நீடூழி வாழ வேண்டும்
உன் இசையால் நாம் மகிழ வேண்டும்.

அன்புடன்
உன் அன்பு அக்கா
**அஞ்சலா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணிலிருந்து வரும் வாழ்த்து மலர்கள்

அன்புபேரன் டென்ஸ்டனின் குரலிசை, வயலின் அரங்கேற்றத்தை கேள்வியுற்று
விண்ணகத்தில் இருந்து திரு. திருமதி. அம்புறோஸ் தம்பதிகளும்,
திரு. சுவாம்பிள்ளை அவர்களும் தமது வாழ்த்து மலர்களைப் பொழிந்திருக்கின்றார்கள்.



இசைக்கலைஞனே,
எங்கள் அன்புச்செல்வமே,
உனது இசையின் நாதம்
எம் காதுகளில் ஒலிக்கின்றது.
நாம் உளம் மகிழ்ந்து
உம்மை வாழ்த்துகின்றோம்.
நீ ஒரு வித்துவானாக,
மேதையாக விளங்க
இறையருள் வேண்டி விண்ணிலிருந்து
எம் ஆசி மலர்களை
உனக்கு தூவுகின்றோம்.
வாழ்க வளர்க !

அப்பப்பா, அப்மம்மா, தாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தினரின் வாழ்த்து

எங்கள் குடும்பம் ஒரு கலைக்குடும்பம். அதற்குக்காரணம் எம் பெற்றோரே! நாங்கள் சிறுவர்களாக இருந்த போது வீட்டில் எம் பெற்றோர்கள் நாட்டுக்கூத்து பாடல்களைப் பாடி எம்மை மகிழ்விப்பார்கள். படிக்கும் காலத்தில் பாடசாலையில் பாட்டு, கூத்து, நாடகம், என்பனவற்றில் நாம் பங்குபெற்று வந்துள்ளோம். எமது ஊரில் இருந்த நசரேத் சன சமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட கலைவிழா, ஆண்டு விழா, பரிசளிப்பு விழா போன்றவற்றிலும் பங்குபற்றியுள்ளோம். நாங்கள் நாட்டு நிலைமை காரணமாக இடம் பெயர்ந்தபோதும், வெளிநாடுகளுக்கு சென்றபோதும், எங்கள் கலையார்வத்தை விட்டுவிடவில்லை. ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்தபோதும், எமது கலை, கலாச்சாரம், பண்பாடு, இவற்றை நாங்கள் மறக்கவில்லை.


எமது எட்டுக்குடும்பங்களிலும் கலை ஈடுபாடு உண்டு. எமது பிள்ளைகள் அனைவரும் கலையார்வம் உள்ளவர்களாக, கலையில் ஈடுபடுவர்களாக கலைப்பாடங்களில் சிறப்புப்பட்டம் பெற்றவர்களாக விளங்குகின்றார்கள்.

அந்த வகையில் ஜேர்மனியில் வசிக்கும் எமது சகோதரர். ரெஜினோல்ட் அவர்களின் கனிஷ்ட புதல்வன். டென்ஸ்டன் ஜேர்மனியில் பிறந்திருந்தாலும் நம் தாய்மொழி தமிழை கற்றது மட்டுமல்லாமல், சாஸ்திரிய இசையில் ஆர்வம் கொண்டு, வயலின், வாய்ப்பாட்டு இரண்டையும் முறைப்படி கற்று இன்று தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்திலுள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி மாணவனாக தனது இரண்டு அரங்கேற்றங்களை சமர்ப்பிப்பது எங்களனைவருக்கும் பெருமகிழ்வைத்தருகின்றது.

அவரை கனடாவில் வசிக்கும், அம்புறோஸ் ஞானானந்தம் பெரியப்பா குடும்பத்தினரும், கொழும்பில் வசிக்கும் அம்புறோஸ் பீற்றர் (கலைஞான தீபம்) பெரியப்பா குடும்பத்தினரும், கனடாவிலும், கொழும்பிலும் வசிக்கும் திருமதி. நான்சிகிறேஸ் லிகோறி அத்தை குடும்பத்தினரும், சுவிஸ்சில் வசிக்கும் அன்புறோஸ் திருஞானதீபன் பெரியப்பா குடும்பத்தினரும், கொழும்பிலும், சுவிஸ்சிலும் வசிக்கும் திருமதி. ராஜினிபவுளீஸ் அத்தை குடும்பத்தினரும் கனடாவில் வசிக்கம் அம்புறோஸ் டானியல் (றஞ்சன்) சித்தப்பா குடும்பத்தினரும், அம்புறோஸ் வின்சன் சேர்ச்சில் (றிண்டன்) சித்தப்பா குடும்பத்தினரும் தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றனர். டென்ஸ்டனின் கலைப்பயணம் தொடர வாழ்த்துகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு பேரனுக்கு...

அன்புச்செல்வமே டெனிஸ்
அன்று ஜேர்மனியில் பாலக பருவத்தில் மழமை மொழியில்
நீ பாடிய பாடலை அருகிலிருந்து நான் ரசித்தேன்.
இன்று பல பாவலர் மத்தியில் அரங்கேறி நீ பாடும்பொழுது
நான் இலங்கையில் இருந்தாலும், என் நினைவும்,
ஆசியும் உன்னுடனேயே இருந்தது.
என் பேரன்தன் கலைப்பாதையில் இடர்கள் இன்றி,
இனிதே வெற்றிநடைபோட்டு, பற்பல மேடைகண்டு,
இசை மேதையாக வாழ எல்லாம் வல்ல இறைவனும்,
அன்னை மரியாளும்
துணையிருக்க வேண்டி வாழ்த்துகிறேன்.

**வாழ்க !**
**வளமுடன்!**



உன் அன்பு ஆச்சி
**சேசம்மா சுவாம்பிள்ளை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நீ ஓர் ரீங்காரப்பட்சி

# You are a humming - bird

ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் உள்ளடக்கிய கலைவானில் உன் ஆறு வயதிலேயே நரம்பிசை (வயலின்) ஓசையில் பற்று மிக்கவனாய் கற்கை நெறிக்குள்ளாகி, படிப்படியாய் வாய்ப்பாட்டு கற்பதிலும் ஆர்வம் காட்டி பாலக வயதினில் திரு. உமாகாந்தன், திரு. செல்வச்சீராளன் ஆசிரியர்களின் நெறிப்படுத்தலிலும் அதன்பின் இந்தியாவில் கிறிஸ்தவ பாடலாசிரியரும், வயலின் வித்துவானுமாகிய இசையியலாளர். திரு. ஜான் பிரிட்டோ அவர்களிடம் வயலினும், புலம் பெயர் வாழ் தமிழ் மக்கள் மத்தியில் சிம்மக்குரலோன் என்றழைக்கப்படும் வாய்பாட்டுக்கலைஞனான (பாடகனான) திரு. S.கண்ணன் அவர்களிடமும் ஜேர்மன் மணித்திரு நாட்டில் வாய்பாட்டிசையையும் முறைப்படி கற்றுவந்தாய்.

உனது பதின்நான்காம் வயதில் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மிக பணியகம் வெளியிட்ட 'பாடும்பாதங்கள்' என்ற இருவெட்டில் எதற்கோ காத்திருந்து காலத்தை தொலைத்துவிட்டோம் என்னும் பாடலைப் பாடி பலரை உன் ரசிகர்களாக்கினாய்.


துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்திலும் கலைத்தாயின் மீது கொண்ட பற்று மேலிடவே உன் பள்ளியின் கோடைக்கால நீண்டவிடுமுறைநாட்களை வீண்விரயம் செய்யாது தொடர்ந்து 3 வருடங்கள் கலைத்தாயின் பூர்வீகமான இந்தியாவின், தமிழ்நாடு திருச்சி மாவட்டத்தில் கலைவழி திரு இசை மூலம் ஆன்மீகபணிபரப்பும் கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரியில் **ஊர்விட்டு போனாலும் வேர் விட்டுப்போகாது** என்னும் கூற்றுக்கமைய மேலதிக பயிற்சிகளை ஆர்வமுடன் கற்று உன் கலைவாழ்வின் முன்னேற்றத்திற்கு அணி சேர்த்தாய்.

முழுநேர மாணவனாய் அங்கிருந்தவாறே சான்றிதழ் பெறும் தகுதிகாண் கற்கையை மேற்கொண்ட, உனது கலைக்கனவும், பெற்றோர், சகோதரர்களின் எதிர்பார்ப்பும் கைக்கெட்டும் நிலையடைந்து, கலைத்தாயின் அரவணைப்புடன், இறைமகன் கிறிஸ்துவின் பாதுகாப்பும் கூடி நிற்க, கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரியின் பொறுப்பாளர்களின் கண்காணிப்பில் வாய்ப்பாட்டு பாடுவதிலும், நரம்பிசை மீட்டுவதிலும் உந்தன் தகுதிகாண் நிலைலை எடுத்தியம்ப அரங்கம் நிறைந்த மக்கள் மத்தியில் அரங்கேற்றம் காணும் உந்தன் நிலை எண்ணி சகோதர்களாகிய நாமும், அண்ணிமாரும், பெரியம்மா, பெரியப்பாவும், சிறப்பாக மகன் ஜொனவன் டேவிஸும், மகள் நாலாமரியும் அரங்கேற்ற நாயகனான எமது உடன் பிறப்பாகிய உன்னை எல்லாம் வல்ல இறைவனின் ஆசி கொண்டு வாழ்த்துகிறோம் உனது இசைப்பயணம் மென்மேலும் முன்னேற்றம் பெற மூவொரு இறைவனை வேண்டுகிறோம்.

*அமையட்டும் சிறப்புடன் அரங்கேற்றம்! வளரட்டும் உன்தன் இசைப்பணி !! தொடரட்டும் நின்தன் விடாமுயற்சி !!!*

*உன்னை அன்புடன் வாழ்த்தி நிற்கும்*

*அம்மா, அப்பா அண்ணன்மார், அண்ணிமார், தம்பி, பெரியம்மா, பெரியப்பா, பிள்ளைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விபுலானந்த அடிகளாரின் 55 ஆண்டுக் கால வாழ்க்கை வரலாறு



சிறு குறிப்பு

1892 மார்ச் 27 : அடிகளாரின் பிறப்பு.

இடம் : மட்டக்களப்பைச் சேர்ந்த காரைத்தீவு

தந்தையார் : சின்னத்தம்பி சாமித்தம்பி விதானையார்

தாயார் : இராசகோபாலப்பிள்ளை கண்ணம்மை

பெயர் : மயில்வாகனர்

வித்தியாரம்பம் : நல்லரத்னம் குஞ்சித்தம்பி ஆசிரியர்கள்

1904 கல்முனை மெதடிஸ்டு மிஷன் லீஸ் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி

1906 மட்டக்களப்பு மெதடிஸ்டு மிஷன் மத்தியக் கல்லூரியில் கல்வி

1906 டிசம்பர் – கேம்பிரிட்ஜ் ஜூனியர் பரீட்சையில் தேர்வு

1908 மட்டக்களப்பு புனித மிகேல் கல்லூரியில் கல்வி

1910 மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியர்

1911 தாயாரின் மறைவைத் தொடர்ந்து, கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் ஆசிரியர்

1912 கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் பயிற்சி

1914 புனித மிக்கேல் கல்லூரியில் பயிற்சி

1915 கணேச தோத்திர பஞ்சகம்,

கதிரையம்பதி மாணிக்கம்பிள்ளையார் இரட்டை மணிமாலை,

கதிரையம்பதி சுப்பிரமணியசுவாமி இரட்டை மணிமாலை,

கோதண்டநியாயபுரிக் குமாரவேள் நவமணிமாலை என்னும் பிரபந்தங்களின் வெளியீடு. (சங்கானை சச்சிதானந்த அச்சியந்திரசாலைப் பதிப்பு)

1916 அரசினர் பொறியியல் கல்லூரியில் விஞ்ஞானம் கற்று விஞ்ஞான டிப்ளோமா என்னும் பட்டம் பெறுதல்.

1916 மதுரைத்தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையிற் தேர்ச்சியடைந்து இலங்கையின் முதற் பண்டிதர் என்னும் பெருமையினைப் பெறுதல்.

1917 அரசினர் பொறியிற் கல்லூரியில் வேதிநூல் உதவி ஆசிரியர்.

1920 யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் வேதிநூல் ஆசிரியர்.

1920 இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் (பி.எஸ்ஸி.) பட்டம் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1921 யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினை நிறுவுவதில் உதவிபுரிதல்.

1922 யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர்

1922 துறவறத்தினை விழைந்து மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்தல்.

துறவறப் பெயர் பிரபோதசைதன்யர்

இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்) வேதாந்த கேசரி (ஆங்கிலம்) ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர்.

பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியாரால் இயற்றப்பட்டு, மட்டக்களப்பு வித்துவான் பூபாலப்பிள்ளை அவர்களால் உரைவிளக்கம் செய்யப்பட்ட "உலகியல் விளக்கம்" என்னும் நூலினைப் பதிப்பித்தல்.

1924 ஞானோபதேசம் பெற்று சுவாமி சிவானந்தரால், "விபுலாநந்தர்" என்னும் பெயர் சூட்டப்படல்.

1925 இலங்கை திரும்பி, மட்டக்களப்பிலே விவேகானந்த சபையினரால் நடத்தப்பட்ட பாடசாலைகளின் மேற்பார்வையை ஏற்றல்.

1925 ஜூன் 08 – தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்களுக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத்தினரால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவிலே இலங்கையின் பிரதிநிதியாகப் பங்குகொள்ளல். தமிழ்ச் சங்கத்திலே சொற்பொழிவு செய்தல்.

அக்டோபர் 28 –காரைத்தீவு சாரதா வித்தியாலயத்துக்கு அடிக்கல்

நவம்பர் 06 – மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திற்கு அடிக்கல்.

நவம்பர் 30 – திருகோணமலை ஆங்கிலக் கல்லூரியின் புதுக்கட்டிட அடிக்கல்.

1926 பெப்ரவரி – யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயம், விவேகானந்த வித்தியாலயம் ஆகியவற்றுக்குப் பொறுப்பேற்றல்.

மார்ச் – கொழும்பில் விவேகானந்த வித்தியாலயம் தொடங்கி வைக்கப்படுதல்.

மார்ச் – திருகோணமலை – மட்டக்களப்புப் பகுதியின் கல்வி ஆலோசனைக் சபை உறுப்பினராக அரசினால் நியமிக்கப்படல்.

1926 ஏப்ரல் – கல்கத்தா – பேலூரிலுள்ள இராமகிருஷ்ண தலைமை மடத்தில் நடைபெற்ற மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகப் பங்குகொள்ளல்.

ஜூன் – யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரர் வித்தியாலத்தியல் அநாதைச் சிறுவர்களுக்கான மாணவர் இல்லத்தை ஆரம்பித்தல்.

1926 மதங்கசூளாமணி என்னும் நாடகத்தமிழ்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1927 ஏப்ரல் - சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவது தொடர்பான விசாரணைச்சபையின் முன் சாட்சி கூறுதல்.

ஆகஸ்ட் - கண்டி சைவமகாசபை ஆண்டுவிழாவுக்குத் தலைமை தாங்குதல்.

நவம்பர் - இலங்கைக்கு வருகை தந்திருந்த காந்தி அடிகளாரை, மாணவர் மகாநாட்டுத் தலைவர் என்ற வகையில் வரவேற்றல்.

1929 திருகோணமலை ஆங்கிலக் கல்லூரியின் அதிபர்.

1929 சிவானந்த வித்தியாலயத்தின் திறப்பு விழாவை நடத்தி வைத்தல்.

1930 யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கமத் தேர்வாளர்.

இராமகிருஷ்ண பாடசாலைகளை பரிபாலிக்கும் பொறுப்பு

1931 ஜனவரி – அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்.

1934 கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவிற்குத் தலைமை தாங்குதல்.

1935 சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்.

1936 பெப்ரவரி 22 - 29 சென்னைப் பல்கலைக்கழகப் பட்டி மண்டபத்திலே "யாழ்ப்பாணன்", "தமிழிசை", "சிலப்பதிகார அரங்கேற்று காதை", "7 ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் இருந்த தமிழிசை", "பழந்தமிழகத்துச் சிற்பாசிரியர்கள்", "பரிசனவேதி", என்னும் பொருள்களில் தொடர்ச்சியான சொற்பொழிவுகள்.

1936 டிசம்பர் - சென்னை மாகாண தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கலைச்சொல்லாக்க மகாநாட்டுக்குத் தலைமை தாங்குதல்.

1936 மேற்படி தமிழ்ச்சங்கம் கலைச்சொற்கள் என்னும் அகராதி நூலினை வெளியிடுதல்.

1940 மாயாவதி ஆசிரமத்திலிருந்து "பிரபுத்த பாரத" என்னும் இராமகிருஷ்ண சங்க ஆங்கில சஞ்சிகையை வெளியிடுதல்.

1947 இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் பதவி.

1947 ஜூன் 05, 06 - திருக்கொள்ளம் பூதூரில் கரந்தைத் தமிழ் சங்க வெளியீடாக "யாழ் நூல்" அரங்கேற்றப்படல்.

1947 ஜூலை 19 – வீடுபேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநாயகி சூரியகுமாரன்
## Kalanayaki Suriakumaran

### வாழ்க்கை வரலாறு



பிறப்பு : 27 சித்திரை 1951 யாழ்ப்பாணம் (இலங்கை)

கல்வி : கந்தர்மட சைவப்பிரகாச வித்தியாலயம்
யாழ்.இந்துமகளிர் கல்லூரி,
வவுனியா மகாவித்தியாலயம்

இசைக்கல்வி : சங்கீத பூசனம் பாலசிங்கம், திரு. ஆ.நமச்சிவாயம்
கோப்பாய் அரசினர் பயிற்சிக்கல்லூரி
திரு. ஐயாக்கண்ணு தேசிகர்
இராமநாதன் இசைக்கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம்

தொழில் : இசை ஆசிரியை
சேனையூர் மகாவித்தியாலயம், மூதூர்
மெதடிஸ் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை
யாழ். சென்.சார்ள்ஸ் மகாவித்தியாலயம்

ஆற்றல் : இளம் கலைமன்றத்தினால் (இலங்கை) 1974 இல் நடாத்தப்பட்ட இசைப்போட்டியில் இரண்டாவது இடத்தினையும், 1975 இல் முதலாவது இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தினைப் பெற்றதுடன் இசைமாணி பட்டத்தினையும் பெற்றமை.

இறைபுகழை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்ட இசை வடிவங்களையே பாரம்பரியமாகக் கொண்ட செவ்விசையில் போர்ச்சூழல்களை சித்தரிக்கும் பாக்களையும் பாடலாமென புலம் பெயர்ந்த நாடுகளில் முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்டனம்.

இழப்பு : 12 மாசி 1991, ஜீச்சன் – ஜேர்மனி

பின்குறிப்பு : தாயாரின் இசைப்பணியினை மகன் கௌசிகன் சூரியகுமார் அவர்கள் ஜேர்மன் நாட்டில் முன்னெடுத்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேணுகானவர்த்தி சுந்தரம் பிள்ளை செல்வநாயகம்

## Venuganavarithi Suntharampillai Selvanayagam

## வாழ்க்கை வரலாறு



பிறப்பு : 29 மார்கழி 1923 திருநெல்வேலி, இலங்கை

கல்வி : திருநெல்வேலி சைவ வித்தியாசாலை
இசைக்கல்வியைப் பயிற்றுவித்தவர்
பிரம்மஸ்ரீமூர்த்தி ஐயர்

தொழில் : இசைஆசிரியர்
1945 முதுல் புல்லாங்குழல் இசைக்கலைஞராக இலங்கை வானொலியை கடமையாற்றினார்.

இறப்பு : 12 புரட்டாதி 1984

குறிப்பு : மூங்கிலில் வண்டுக்களால் துளையிடப்பட்டு அதிலிருந்து பிறந்த இனிய ஒலியைக் கேட்ட பழந்தமிழர்கள் அதனை மூல காரணமாகக் கொண்டு மூங்கிலைத் துண்டாக்கி அதில் துளைகளையிட்டு புல்லாங்குழல் இசை வாத்தியத்தினை உருவாக்கினர். இப்புல்லாங்குழலின் உதவியுடன் ஏழுசுரங்கள் தமிழர்களால் தீர்மானிக்கப்பட்டன. இவ் ஏழுசுர அமைப்பே தமிழர் இசைக்கும், கர்நாடக இசைக்கும், உலக இசைகளுக்கும் அடிப்படையாக உள்ளது தீர்மானிக்கப்பட்ட ஏழு சுரங்களிலிருந்து பிறந்த இனிய ஒலிகளைக் கொண்டு பண்கள் உருவாகின.

முதன்மை இசை வாச்சியங்களில் ஒன்றான புல்லாங்குழல் இசைக்கலைஞர்கள் இலங்கையில் ஒருசிலரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்செம்மல். திலகநாயகம் போல்
## Thilaganayagam Paul

## வாழ்க்கை வரலாறு



பிறப்பு : 1940 குருநகர் (தமிழீழம்)

கல்வி : யாழ் புனித சால்ஸ் மகாவித்தியாலயம்
யாழ் புனித பத்திரீசியார் கல்லூரி

இசைக்கல்வி : சங்கீத பூசனம் திரு. எஸ்.பாலசிங்கம்,
திரு.எம்.எம்.தண்டபாணி தேசிகர்,
மைலம் வஞ்சரவேல் முதலியார்
திரு. ரி.கே.ரங்காச்சாரியார்,
திரு.ரி,என்.சிவசுப்பிரமணியம் பிள்ளை
திரு.எஸ்.வேணுகோபால ஐயர்.
அண்ணாமலைப்பல்கலைக்கழகம் (இந்தியா)

தொழில் : இசைஞர், இசை ஆசிரியர், பாடகர்
(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)

ஆற்றல் : 1965ல் முதற்பிரிவில் சங்கீதபூசணம் பெற்றமை. இவர் இயற்றிய **"பரதநாட்டியம்"** பற்றிய நூலும், ஜேர்மன் டோர்ட்முண்ட கலையக கோரிக்கைக்காக இயற்றிய புதிய நோக்கில் **"செந்தமிழ் பாக்கள்"** நூலும் பெருங்சிறப்புடையவைகள். செந்தமிழ் பாக்கள் நூலானது புதிய நோக்கத்தினைக் கொண்டது. இதில் இயற்றப்பட்டுள்ள தானவர்ணங்கள், அடதாள வர்ணங்கள் வாழ்வியலுக்குப் பயன்தரும் கருத்துக்களைக் பற்றி, தனது ஆசிரியர்கள் பற்றி, தமிழ் பெரியார்கள் பற்றி அமைந்தவை. இது நாள் வரை யாரும் செய்யாத பெரும் பணிகளாகும்.

திரு.திலகநாயகம் போல் அவர்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் அவர் ஆற்றிய இசைப்பணிகளால் பிரியாது என்றும் எம்முடன் இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவின் கலைஞர்கள்

புங்குடுதீவில் பல கலைஞர்கள் பிறந்திருக்கிறார்கள். சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். சில இசைக் கலைஞர்கள் சிறந்து விளங்கினார்கள். கர்நாடக இசை, பண்ணிசை, நாதஸ்வரஇசை, நாட்டார்பாடல் என்று பல்வேறு இசைத்துறையிலும் பல கலைஞர்கள் புகழ்பெற்று விளங்கினர். புங்குடுதீவில் ஓர் இசைப்பாரம்பாரியம் நிலவிவந்துள்ளது. சைவத்திருமுறைகளைப் பண்ணுடன் பாடக்கூடிய கலைஞர்கள் 19 ஆம் நூற்றாண்டு தொடக்கமே வாழ்ந்து வந்துள்ளனர். கந்தபுராண படனம் பண்ணிசை என்பன வளர்ச்சியடைந்தன. கோயில்களில் தேவாரம் பாடுவதில் சிறந்த கலைஞர்கள் இன்றும் வாழ்கிறார்கள்.

க.வினாசித்தம்பி, நா.தில்லையம்பலம் போன்ற ஆசிரியர்கள் பாடுவதிலம், பயிற்சியளிப்பதிலும் சிறந்து விளங்கினர். இவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றவற்றிலிருந்து பயிற்சி பெற்றுத் திருப்பினர். புங்குடுதீவில் இசையை வளர்த்தவர்களின் சங்கீத பூஷணங்களான தா.இராசலிங்கம், தா.பாலசுந்தரம் போன்ற ஆசிரியர்கள் முக்கியமானவர்கள்.தா.பாலசுந்தரம் ஆசிரியர் நெடுந்தீவிலும் நீண்டகாலம் இசையாசிரியராக கடமையாற்றியவர். சங்கீத பூஷணம், தா.இராசலிங்கம் புங்குடுதீவில் இசைப்பணி செய்தவர். கனகசுந்தரம் என்ற ஆசிரியர் வாய்ப்பாட்டிலும், வீணை வாசிப்பதிலும் சிறந்து விளங்கினார்.

புங்குடுதீவு மாணவர்களிடையே சங்கீதக் கலை உயர்ந்து விளங்கியது. அதற்கு மகாவித்தியாலயத்தில் கற்பித்த சங்கீதபூஷணம் க. தாமோதரம்பிள்ளையும் ஒரு காரணகர்த்தாவாவார். வை.குமாரசாமி வாத்தியாரும் தனது இனிய குரலால் தேவார திருமுறைகளைப் பண்ணோடு பாடுவார். சந்திரபாலன் ஆசிரியரும் சிறந்த இசையாசிரியர். விமலாதேவி, ராஜேஸ்வரி போன்ற இசை ஆசிரியர்களும் புங்குடுதீவைச் சேர்ந்தவர்களே. நடராசா போன்ற வயலின் கலைஞரும், திருப்பூங்குடி ஆறுமுகம் போன்ற வில்லிசைக் கலைஞர்களும் புங்குடுதீவின் இசைப்பாரம்பரியத்தை வளர்த்தவர்களில் முக்கியமானவர்கள். தபேலா வாசிப்பதில் தம்பிஐயா சிறந்து விளங்கினார். வயலின் வாசிப்பதில் ஆசிரியை மஞ்சுளா திருநாவுக்கரசு புகழ் பெற்றவர்.

கர்நாடக இசையில் யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்களில் புத்துவாட்டி சின்னத்தம்பியின் மனைவி பொன்னு அவர்களும் பிரபலமானவர். புகழ்பெற்ற நாதஸ்வர, தவில் வித்துவான்களான என்.ஆர்.கோவிந்தசாமி, என்.ஆர்.சின்னராசா ஆகியோரின் தாயார் புங்குடுதீவைச் சேர்ந்தவர். சங்கீதத்தை முறையாக கற்காமல் இனிமையானகுரல் வளத்தால் உயர்ந்தவர்கள் பலரும் இங்கு இருந்தனர். இவர்கள் தேவராம், திருவாசகம் போன்றவற்றைப் பாடுவதில் சிறந்து விளங்கினர். பிரபல நாட்டிய நர்த்தகி வாசுகி விக்னேஸ்வரன் மற்றும் அவரது சகோதரர் ரூபவாஹினி விஸ்வநாதன் ஆகியோரின் தந்தையார் சண்முகம்பிள்ளை பிரபல மிருதங்க வித்துவானாவார். சண்முகம்பிள்ளையின் தாயார் புங்குடுதீவைச் சேர்ந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத பூஷணம் பொன்.சுந்தரலிங்கம் கர்நாடக இசையில் வல்லவர். அவர் தம்பி பொன். கபாஷ்சந்திரன் மெல்லிசையில் வல்லவர். இவர்கள் இருவரினதும் கர்நாடகப் பாடல்களும், மெல்லிசைப் பாடல்களும் பல இசைத்தட்டுகளாக வெளிவந்திருக்கின்றன. புங்குடுதீவின் இசை வளர்ச்சியில் லிங்கம் சகோதரர்களுக்கும் பங்குண்டு. சங்கீத பூஷணங்களான சண்முகலிங்கம் மாஸ்டரும் கனகலிங்கம் மாஸ்டரும் லிங்கம் சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பாடசாலைகளிலும் தனிப்பட்ட முறையிலும் இசைவளர்ச்சியில் பெரும்பங்காற்றினர்.

மண்டைதீவில் பிறந்த கனகலிங்கம் புங்குடுதீவில் திருமணம் செய்தார். இவரும் இவரது தம்பியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப்பட்டம் பெற்றனர். புங்குடுதீவுப் பாடசாலையில் கற்பித்தனர். இவர்கள் லிங்கம் சகோதரர்கள் இசைக்குழு என்று ஒன்றை அமைத்து இசை வளர்த்தனர். நொட்டி நடராசா என்பவர் சங்கீத ஆசிரியராக புங்குடுதீவுப் பாடசாலைகளில் கடமையாற்றினார். இவர் வயலின் வாசிப்பதிலும் கெட்டிக்காரர். பரஞ்சோதி ரதிரூபன் கனடாவில் சிறந்த மிருதங்க வித்துவானாக விளங்குகிறார். கிருபானந்தவேல் அருண் இளம் மிருதங்க வித்வானாக லண்டனில் வளர்ந்து வருகிறார். எழுச்சிப் பாடல்கள் பாடி புகழ்பெற்ற எஸ்.ஜி.சாந்தன் (செல்லப்பா குணரெத்தினம் சாந்தன்) புங்குடுதீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சங்கீத பூஷணம்

## தா.இராசலிங்கம்

புங்குடுதீவில் பிறந்த இசைக்கலைஞர்களில் சங்கீத பூஷணம் தா.இராசலிங்கம் முக்கியமானவர். அக்காலத்திலேயே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். இவர் இசையுலகில் தனக்கென தனியான இடத்தைப் பெறுகிறார். இலங்கையில் வாழ்ந்த காலத்தில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றியவர். வாய்ப்பாட்டில் மட்டுமன்றி இசைவிழாக்கள், மாணவர் இசைப் போட்டிகள் மற்றும் ஊறடக இசைக்கலை போன்றவற்றுக்கு புத்துயிர்ப்பு வழங்கி வளர்த்த இசையறிஞர். கனடாவில் இன்றுங்கூட மாணவர் பரம்பரை ஒன்றினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். மேடைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி மற்றவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக விளங்குறிார். கனடா ஸ்காபரோவில் இவர் வசிக்கும் இல்லம் ஒரு இசைக் கூடமாகவே விளங்குகிறது. கர்நாடக சங்கீதம் தொடர்பான பலநூல்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது தமையனாரான தா.பாலசுந்தரமும் புகழ் பெற்ற இசையாசிரியராவார். தா.இராசலிங்கத்தின் புதல்வரான வாசுதேவன் திறமைமிக்க மிருதங்க வித்துவானாவார். வயதில் இளையவரானாலும் மிருதங்கக் கலையில் புகழ்பெற்று விளங்குகிறார்.



கச்சேரிகள், நாட்டிய அரங்கேற்றங்கள் போன்ற அனைத்திலும் கடந்த பல ஆண்டுகளாக தனது திறமையை மிருதங்க வாசிப்பில் நிலை நாட்டி வருகிறார். பரம்பரையான சங்கீத ஞானமும் தந்தையாரிடம் கற்றுக்கொண்ட பயிற்சி முறைகளும் வாசுதேவனை மிருதங்கத்தின் பக்கம் திசை திருப்பியது. இளவயதில் யாழ்ப்பாணத்தில் ஏ.எஸ்.இராமநாதன் அவர்களிடம் முறையாக மிருதங்கம் கற்றவர். சென்னையில் பூவலூர் - ஸ்ரீநிவாசா, நெய்வேலி - வெங்கடேஷ், மடிப்பாக்கம் - சுரேஷ் ஆகியோரிடமும் பயிற்சி பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 இல் கனடாவுக்கு வந்த வாசுதேவன் மிருதங்க சேஷ்த்திரம் என்ற பெயரில் பாடாசாலையை அமைத்தார். இங்கு மிருதங்கத்துடன் இவர் வேறு இசைக்கருவிகளையும் கற்பித்து வருகிறார். ஐந்நூறுக்கு மேற்பட்ட மேடை நிகழ்ச்சிகளிலும் நூற்றுக்கு மேற்பட்ட நடன அரங்கேற்றங்களிலும் மிருதங்கம் வாசித்துள்ளார். சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம், புல்லாங்குழல் - பிரபஞ்சன் சேதுராமன், மண்டலின் - ராஜ், வீணை - லக்சுமிரங்கநாதன், தவில் மேதை - கணேசபிள்ளை, நாதஸ்வரம் - கலாநிதி, என்.கே. பத்மநாதன் போன்ற புகழ்பெற்ற இசைக் கலைஞர்களுடம் சேர்ந்து மிருதங்கம் வாசித்திருக்கிறார்.

பல்வேறு பரிசுகள் பெற்ற இரா. வாசுதேவனுக்கு கனடாவின் தமிழர்தகவல் விருதும் கிடைத்திருக்கிறது. சங்கீத பூஷணம் தா.இராசலிங்கத்தின் சகோதரர் தா.பாலசுந்தரமும் கனடாவில் வாழ்ந்து கொண்டு இசை பணி செய்கின்றார். இவர்களது குடும்பமே ஒரு இசைக் குடும்பம் என்றால் அதில் தவறு எதுவும் இல்லை.

இன்னிசை வேந்தர்

## பொன். சுந்தரலிங்கம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன். சுந்தரலிங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். ரி.கே.ரங்காச்சாரி, சிதம்பரம் சிவசுப்பிரமணியபிள்ளை, வேணுகோபால ஐயர் போன்றோரிடம் இசை பயின்றார். 35 ஆண்டுகால இசை அனுபவத்தில் இன்று அருகிவரும் சம்பிரதாய ராக வெளிப்பாடுகளில் மதுரை சோமசுந்தரம், மகாராஜபுரம் சந்தானம் போன்றவர்களை நினைவுபடுத்தும் ஓர் உன்னத, கலைஞராக திகழ்கிறார்.



இலங்கை வானொலியினதும் இலங்கை தொலைக்காட்சி சேவையினதும் அதிஉயர் தர கலைஞரான இவர், சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா என்று பல நாடுகளிலும் பிரபல்யத்தைப் பெற்றிருக்கிறார். பண்ணிசை பாடுவதிலும் சிறந்தவரான இவரின் பன்னிரு திருமுறைப் பாடல்கள் 15 ஒலிப்பேழைகளாக வெளிவந்திருக்கின்றன. வலங்கைமான் சண்முகசுந்தரம், முனிரத்தினம் ஆகியோருடனும் என்.ஆர்.சின்னராசா, எஸ்.கணேசபிள்ளை போன்ற ஈழத்து தவில் மேதைகளின் ஏழு தவில்களுடன் யாழ்ப்பாணத்து இசைவிழா ஒன்றில் இவர் பாடிய இராகம் தாளம் பல்லவி நிகழ்ச்சி மிகுந்த புகழ் பெற்றது.

சிங்கப்பூரில் இன்னிசை வேந்தர் சிட்னியில் சுருதி லய மாமணி ஜெர்மனியில் தமிழிசைச் செல்வர் என்பன இவர் பெற்ற கௌரவ பட்டங்களில் சில. அருமையான ஓர் இசைக்கலைஞர் என்பதற்குப் புறம்பாக, இளம் கலைஞர் மன்றம் என்ற அமைப்பை உருவாக்கி இளைய தலைமுறையினரையும் இணைத்து கர்நாடக இசை வளர்ச்சியில் இலங்கையில் இவர் ஏற்படுத்திய தாக்கம் மகத்தானது. இவரால் நிர்மாணிக்கப்பட்ட இளம் கலைஞர் மன்ற மண்டபமே இன்று யாழ்ப்பாணத்தின் ஒரே கலா மண்டபமாக மிளிர்கிறது. பொன்.சுந்தரலிங்கம் இப்பொழுது கனடாவில் வசித்து வருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத பூஷணம்

## பொன். சுபாஷ்சந்திரன்



சங்கீத குடும்பத்தைச் சேர்ந்த சங்கீத பூஷணம் பொன்.சுபாஷ்சந்திரன், இசைத்துறையிலே ஈடுபடுவதற்கு அவரது சகோதரன் சங்கீதபூஷணம் பொன்.சுந்தலிங்கம் தான் மூலகாரணமாகத் திகழ்ந்தார். முதலில் யாழ். வேலணை இந்துக்கல்லூரியில் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றியவர். 1979 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இலங்கை வானொலிக்குத் தனது பங்களிப்புகளை வழங்கத் தொடங்கினார். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்பாளராகத் திகழ்ந்து பல மெல்லிசைப்பாடல்களை உருவாக்கினார். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் ஏ பிரிவில் கர்நாடக இசைபாடியவர்.

மெல்லிசைப் பாடல்களை பாடியவர் என்ற பெருமையும் இவருக்குரியதாகும். இக்கால கட்டத்தில் இலங்கையின் பல பாகங்களிலும், நடாத்திய மேடை இசைக்கச்சேரிகள், நிகழ்ச்சிகள் இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்திருக்கின்றன. சுபாஷ்சந்திரன் பாடிய பல மெல்லிசைப்பாடல்கள் புகழ் பெற்று திகழ்கின்றன. இன்றும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி வருகின்றன. 1987 ஆம் ஆண்டில் நோர்வே வந்து சேர்ந்தார். நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளில் இடம்பெற்ற சர்வதேச நிகழ்ச்சிகளில் கர்நாடக இசையில் அமைந்த இலங்கைப்பாடல்களை பாடி நாட்டிற்கும் இலங்கைக் கலைஞர்களுக்கும் பெருமை சேர்த்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாத்துறையில் புங்குடுதீவுப் புதல்வர்கள்



புங்குடுதீவுக் கிராமத்தில் பிறந்த பலர், பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். இயல், இசை, நாடகம் என்றும் துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். நவீன கலையான சினிமாக்கலையிலும் சிறந்த பல கலைஞர்கள் புங்குடுதீவில் வாழ்ந்திருக்கிறார்கள்.

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் பிறந்த விஸ்வலிங்கம் அவர்களுக்கு நான்கு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் பிறந்தனர். ஆண்களில் மூத்தவரின் பெயர் செல்லையா. அவர் ஆசிரியரானார். ஆசிரியர் செல்லையா சங்கானையில் மணம் முடித்து அங்குள்ள சிராமசபையின் தலைவராகவும் இருந்தார். இவரது மகன் தான் பிரபல தென்னிந்திய சினிமா இயக்குநர் வி.சி.குகநாதன். இந்த குகநாதன் புங்குடுதீவு தல்லமியில் பிறந்தவர். இவரது முழுப்பெயர் விஸ்வலிங்கம் செல்லையா குகநாதன் என்பதாகும்.

இலங்கையில் முதன் முதலாக தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படம் சமுதாயம் ஆகும். இத்திரைப்படத்துக்கான கதை வசனம் எழுதியவர் ஜீவா நாவுக்கரசன் என்ற எழுத்தாளராவார். இவர் பூமாலை என்ற கலை இலக்கியச் சஞ்சிகையை நீண்டகாலம் நடத்தியவர். இவர் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது வர்ணச் சிங்களப்படம் ரன் முத்து தூவ என்பதாகும். தங்கத்தீவு என்பது அதன் அர்த்தம். இத்திரைப்படத்தை ஒளிப்பதிவு செய்தவர் ஏ.வி.எம்.வாசகம் என்ற கலைஞராவார். வாடைக்காற்று என்ற தமிழ்த்திரைப்படத்தையும் இவரே ஒளிப்பதிவு செய்தார். இப்பொழுது கனடாவில் வாழும் இவர் புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்.

சி.சண்முகம் என்ற எழுத்தாளர் வானொலி நாடகங்கள் எழுதிப்புகழ் பெற்றார். இவர் எழுதிய பல கதைகள் சிங்களத் திரைப்படங்களாகவும் உருவாகியிருக்கின்றன. பிரபல வானொலி அறிவிப்பாளர் திருமதி. ராஜேஸ்வரி சண்முகத்தின் கணவரான இவர் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் பிறந்தவர். இலங்கையின் புகழ்பெற்ற நாடகக்கலைஞர் எம்.உதயகுமார். கடமையின் எல்லை, மஞ்சள் குங்குமம், போன்ற இலங்கைத் தமிழ்ப்படங்களில் கதாநாயகனாக நடித்தவர். மாமியார் வீடு என்ற படத்தில் இந்திய நடிகை ஜெயாவுக்கு துணையாக நடித்தவர். கொழும்பு நகராட்சி மன்றத் தேர்தலில் போட்டி போட்டு கணிசமான வாக்குகளைப் பெற்றவர். இவர் புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தில் பிறந்தவர்.

இலங்கை வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்றிக் கொண்டு பல தொலைக்காட்சி நாடகங்களில் நடித்தவர் தம்பிஐயா தேவதாஸ். இலங்கை சினிமா சம்பந்தமான பல புத்தகங்களை எழுதி வெளியிட்டவர். இவரும் புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தில் பிறந்தவர்.

இந்தியாவில் பல தமிழ்ப்படங்களை தயாரித்த சுந்தரம்பிள்ளை ஆனந்தசிவம் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தில் பிறந்தவர். இவரது தம்பியார் இந்தியப்படங்களை இங்கிலாந்துக்கு இறக்குமதி செய்து விநியோகம் செய்தவர். ஆனந்தசிவத்தின் மகன் ஒருவர் இப்போது ஹொலிவூட்டில் ஒளிப்பதிவுத்துறையில் பயிற்சி பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் புங்குடுதீவு இளைஞர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் சிறு சிறு வீடியோப்படங்களையும் தயாரித்திருக்கிறார்கள். இவர்களில் கனடாவில் வாழும் ஆசிரியர்கள் தனபாலன், தர்மபாலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஈழத்துச் சிவானந்தன் கனடாவில் பல வீடியோ படங்களில் நடித்தவர். ஜேர்மனி – பூவராக மூலம் இந்து மகேஷ் கோடையில் வந்த மழை என்ற பெயரில் குறும்படம் ஒன்று தயாரித்து 1995 இல் சின்னத்திரையில் காண்பித்தார். புங்குடுதீவில் பிறந்த பலர் தென்னிந்திய தமிழ்ப்படங்களை தாங்கள் வாழும் நாடுகளில் இறக்குமதி செய்து வெளியிட்டிருக்கிறார்கள். புங்குடுதீவு மக்களில் சிலர்தாம் புலம் பெயர்ந்த நாடுகளில் திரைப்படங்களை இறக்குமதி செய்து தொழில் செய்தனர். கனடாவில் திரைப்படங்களை இறக்குமதி செய்ததில் சின்னத்துரை விதானையாரின் மகள் மங்கையும் அவரது சகோதரன் நவம். நவத்தின் மருமகன் தர்மரெத்தினம் உதயகுமாரும் முக்கியமானவர்கள்.



மனோன் சினி மூவீஸ் உரிமையாளர் பொன். ஆரூரன் பல படங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்து வெளியிட்டார். பல சிங்களப்படங்களைத் தயாரித்தார். சந்துனி நாகன்யா போன்ற சிங்களப் படங்கள் அவர் தயாரித்தவைகளில் முக்கியமானவை. லீடர் என்ற தலைப்பில் தமிழிலும் சிங்களத்திலும் அவர் படமொன்றை தயாரித்தார். இவர் புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பிரபல வர்த்தகர் அமரர் கே.பொன்னம்பலம் அவர்களின் புதல்வர்.



கொழும்பு கொம்பனித் தெருவில் விக்டோறியா வர்த்தக நிலையம் புகழ்பெற்றது. அதன் உரிமையாளர் கலைகளிலும் சமயத்திலும் ஆர்வமுடைய எஸ்.தில்லைநாதன் புங்குடுதீவில் பிறந்தவர். தில்லைநாதனின் மகன் தில்லை வண்ணம் நீண்டகாலம் கனடாவில் வாழ்ந்தவர். சினிமா ஆர்வம் காரணமாக இலங்கை வந்து இந்தியா இலங்கை கூட்டுத்தயாரிப்பாக காதல் கடிதம் என்னும் படத்தை தயாரித்து வருகிறார். இப்படத்துக்காக 2006 ஆண்டு வெப்சைட் ஒன்றையும் ஆரம்பித்துள்ளார்.

இப்படத்துக்கான பாடல் காட்சிகள் இலங்கையில் ஒளிப்பதிவு செய்யப்பட்டன.


புங்குடுதீவில் பல ஓவியர்களும் வாழ்ந்தார்கள். புங்குடுதீவில் பிறந்த சோமசுந்தரம் அவர்களும் அவரது புதல்வர்களும் வரைந்த ஓவியங்கள் பல புங்குடுதீவின் கோவில்கள் சிலவற்றில் காணப்படுகின்றன. அரிய நாயகன் புலம் வீரகத்தி விநாயகர் கோவில், பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில் ஆகயிவற்றில் இவர்களது ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. வெளிநாட்டுக் கோவில்களிலும் இவர்களது ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரத்தினம் சகோதரர்கள் இசைக்கச்சேரி நடத்துவதில் வல்லவர்கள். இவர்கள் ஓவியம் வரைவதிலும் கெட்டிக்காரர்கள். தெங்கந்திடல் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வசந்த மண்டப திரைச்சீலையை இவர்களது ஓவியமே அழகு செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர்கள்

1900 ஆம் ஆண்டளவில் புங்குடுதீவுக் கலைஞர்கள் பலர் நாடகக்கலையில் ஈடுபாடு காட்டினர். யாழ்ப்பாணத்தின் கூத்துக் கொட்டகைகளில் நாடகம் நடித்த தென்னிந்திய சினிமா நட்சத்திரங்களையும் பாடகிகளையும் புங்குடுதீவுக்கு அழைத்து வந்து அறிமுகப்படுத்தினர். கே.பி.சுந்தராம்பாள் போன்ற பாடகிகளை பெருங்காட்டைச் சேர்ந்த முத்தையா புங்குடுதீவுக்கு அழைத்து வந்தார். தென்னிந்திய நடிகை ஒருவரை கிழக்கூரைச் சேர்ந்த மூக்குப்புரி முத்துக்குமார் புங்குடுதீவுக்கு அழைத்து வந்தார்.



திருப்பூங்குடி

### வீ.வீ.கே.ஆறுமுகம்



உயர்ந்த உருவம் உள்ளத்தைக்கவரும் வெண்மைநிறம். அதன்மீது வெண்ணீற்றுப்பூச்சு, நகைச்சுவைகலந்த பேச்சு, இனிமையான குரல்வளம் இவை அனைத்தையும் தன்னகத்தே கொண்டவர்தான் திருப்பூங்குடி வி.வி.கே.ஆறுமுகம் திருப்பூங்குடி என்ற பெயரை புங்குடுதீவுக்கு முதன்முதலில் சூட்டியவர் இவரே. வில்லிசையின் மூலம் புங்குடுதீவின் பெயரை உலகறியச் செய்தவர், இந்த திருப்புங்குடி ஆறுமுகம். யாழ்ப்பாண மாவட்டத்தில் வில்லிசையை வளர்த்த முன்னோடிகளில் இவர் முக்கியமானவர். புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் பிறந்த இவர், அங்குள்ள கணேச மகாவித்தியாலயத்தில் நீண்டகாலம் ஆசிரியராக கடமையாற்றியவர். வில்லிசையும் கதாகாலேட்சபமும் இவருக்கு கைவந்த கலைகள். வீ.வீ.கே.வில்லிசைக்குழு என்ற பெயரில் வில்லிசைக் குழுவொன்றை நீண்டகாலம் நடத்தி வந்தார். இவர் வில்லிசை நடத்தாத கோவில்களே புங்குடுதீவில் இல்லை எனலாம். இலங்கையில் மட்டுமன்றி இவரது வில்லிசைக் கச்சேரிகள் சிங்கர்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளிலும் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கலைஞர்

## அம்புறோஸ் பீட்டர்



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் பிறந்த அம்புறோஸ் பீட்டர், கொழும்பில் பிரபலமானவர். பயிற்றப்பட் மறை ஆசிரியரான இவர், ஒரு சிறந்த நடிகர். இவர் இயற்றிய பாடல்கள் ஒலிப்பேழையாக வந்திருக்கின்றன. சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞர். சிறந்த எழுத்தாளர். தாய் என்ற சஞ்சிகையின் ஆசிரியர். உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் கலைபரப்பி வரும் கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர். கலாசுரபி கவின் கலைகள் பயிலக இயக்குநர். கொழும்பு கிறிஸ்தவ கலைஞர் ஒன்றியத்தின் தலைவர்.

கிறிஸ்தவ சமய எழுச்சி மன்றங்களுடன் நெருங்கிய தொடர்புடைய இவர், கிறிஸ்தவ பாடல்களை 25க்கு மேற்பட்ட ஒலி நாடாக்களாக வெளியிட்டுள்ளார். **"இயேசு கானங்கள்"**. **"திருப்பாடல்கள்" "திரு மணித்தியால திருவிழா வழிபாடு"** என்பன முக்கியமானவை. தேசிய மறைக்கல்வி நிலையம் வழங்கிய மறைச்சுடர் என்ற விருது. கொழும்பு மாவட்ட சாகித்தியவிருது திருமறைகலாமன்ற கலைஞானதீபம் விருது, ஜோசுவாஸமன்ற மறைவளர்க்கும்பணி விருது தேசிய சமூகத் தொடர்பு நிலையம் வழங்கிய சமூக தொடர்பாடல் விருது ஆகியன இவருக்கு தொடர்பாளர் கிடைத்துள்ளன. கொழும்பு வாழ் புங்குடுதீவு கிறிஸ்தவர்களின் மத்தியில் எழுச்சியூட்டிய கலைஞர் அம்புறோஸ் பீட்டராவார்.

இவர் இன்றைய அரங்கேற்ற நாயகன் டென்ஸ்டனின் பெரியப்பா என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. தாளம்

- 7 தாளங்கள், 35 தாளங்கள், 175 தாளங்கள்
- தேசாதி, மத்தியாதி, சாப்பு தாளங்கள்
- 108 தாளங்கள், பஞ்ச தாளங்கள், நவசந்தி தாளங்கள்.

தாளம் என்பது பாட்டினுடைய வரியின் கால நீளத்தை அளந்து நிற்கும் பகுப்புடைய எண்ணிக்கை அளவாகும். இதற்கு எண்ணிக்கையும், இயக்கும் செயல்முறையும், பகுத்த பாகுபாடாகிய உறுப்புக்களும் உண்டு. இது தாள் (பாதம்) + அம் (ஓசை) = தாளம் என்றாகிறது. பாணி என்பது கையால் எண்ணிப் போடவதாகும். இக்காலத்தில் இடது கையின் மீது வலது கையால் எண்ணிப் போடுவது தாளம் என்று அழைக்கப்படுகின்றது.

## தாளத்தின் சிறப்பு :-

சுருதி மாதா, லயம் பிதா என்பது நமது பழமொழி. இதில் சுருதி தாய்க்கும், லயம் தந்தைக்கும் ஒப்பிடப்பட்டு தாளம் சிறந்த இடத்தை வகிக்கின்றது. மகாகவி பாரதியாரும் தாளம், தாளம், தாளம்; தாளத் திற்கோர் தடையுண்டாயின்; கூளம், கூளம், கூளம் என்று சிறப்பிக்கின்றார். தாளத்தின் பெருமையை அகத்தியர் (துங்க முனிவர்) பின்வருமாறு கூறுகிறார்.

தென்றல் வடிவம் சிவனார் திருவடிவும்
மன்றல் வடிவும் மதன் வடிவும் குன்றாத
வேயின் இசைவடிவம் வேதவடிவும் காணில்
ஆயதாளம் காணலம்.

இதில், தென்றல் காற்று, சிவனின் திருவடிவு, வாசனை உணர்வு, மன்மதன் உணர்ச்சி, குழலின் இசை, வேதத்தின் வடிவு ஆகியவற்றை காண்பவர்களால் மட்டுமே தாளத்தைக் காணமுடியும் என்று குறிப்பிடுகின்றார். எனவே தாளத்தை மெய், கண், மூக்கு, உள்ளம், காது, வாய் என்ற ஐம்புலன்களாலும், உள்ளத்தினாலும் ஓர்ந்து உணர்ந்து அறிந்து கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது. எனவே தாளம் என்பது சுவரங்களையோ, பாடல்களையோ, சொற்கட்டுக்களையோ ஒரு குறிப்பிட்ட கால அளவு நிலைக்குள் எண்ணிக்கை அளவில் முறைப்படுத்தி, அவற்றைப் பங்கீடு செய்யும் அளவு கோலாகும்.

## தாளத்தின் பயன்கள் -

1. தாளம் பாடல்களை அளக்கம் அளவுகோலாகும்.
2. தொடக்கம் முதல் இறுதி வரை ஒரே சீராக (லயத்துடன்) பாடல்களைக் கொண்டு செல்கிறது.
3. காலத்தைக் கணக்கிடப் பயன்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாளத்தின் வகைகள் :-

நமது கர்நாடக சங்கீதத்தில் சூழாதி (சூளாதி) சப்த (ஏழு) தாளங்கள், அவற்றின் சாதிபேதத்தினால் உண்டாகும் 35 தாளங்கள், அவற்றின் கதிபேதத்தினால் உண்டாகும் 175 தாளங்கள் ஆகயிலவை உள்ளன. மேலும் மிகப்பழமையான 4 வகை சாப்புத்தாளங்கள், தேசாதி, மத்யாதி தாளங்கள், 72 மேளகர்த்தா ராகத்தாளங்கள், அங்கப்பிரமான சந்தத்தாளங்கள் போன்றவையும் உள்ளன. நாட்டியத்தில் 108 தாளங்கள், 52 அபூர்வ தாளங்கள், பஞ்ச தாளங்கள் போன்றவை உள்ளன. மேலும் ஆலயங்களில் பிரம்ம உற்சவ காலங்களில் பிரம்மா, இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசாணன் என்னும் 9 திசை (சந்தி) களில் இசைக்கப்படும் நவசந்தி தாளங்கள், துருவ தாளம், குரு ஜம்பை தாளம் போன்ற தாளங்களும் உள்ளன.

## 7 தாளங்கள்

**ஏழு [சப்த] தாளங்களின் பெயர்களும், அவற்றின் குறியீடுகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | துருவ தாளம் | - | IOII |
| 2. | மட்டிய தாளம் | - | IOI |
| 3. | ரூபக தாளம் | - | OI |
| 4. | ஜம்பை தாளம் | - | IUO |
| 5. | திருபுடை தாளம் | - | IOO |
| 6. | அடதாளம் | - | IIOO |
| 7. | ஏக தாளம் | - | I |

இந்த தாளங்களின் பகுப்புக்களை (குறியீடுகளை) உறுப்பு (அங்கங்கள்) என்று கூறுகிறோம். இவை 6 வகைப்படும். இவற்றை ஆறு உறுப்புக்கள் என்றும், ஷடாங்கம் என்றும் கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷடாங்கங்கள் (ஆறு உறுப்புக்கள்)

| பெயர்கள் | குறியீடு | அட்சர எண்ணிக்கை | மாத்திரை அன்று | மாத்திரை இன்று | கிரியை (அ) செயல் |
|---|---|---|---|---|---|
| 1. அனுதுருதம் | ◡ | 1 | 1/4 | 4 | ஒரு தட்டு. |
| 2. துருதம் | 0 | 2 | 1/2 | 8 | ஒரு தட்டும், ஒரு வீச்சும். |
| 3. லகு | I | 3,4,5,7,9 | 1 | 16 | ஒரு தட்டும், விரல் எண்ணிக்கையும். |
| 4. குரு | 8 | 8 | 2 | 32 | ஒரு தட்டு, கையைமூடிக் கொண்டு வட்டமாகச் சுற்றுதல் (4+4=8). |
| 5. புலுதம் | 8 (மேல் கோட்டுடன்) | 12 | 3 | 48 | ஒரு தட்டு,ஒரு கிருஷ்யை ஒரு சர்ப்பிணி (4+4+4=12). |
| 6. காகபாதம் | + | 16 | 4 | 64 | ஒரு தட்டு, ஒரு பதாகம், ஒரு கிருஷ்யை, ஒரு சர்ப்பிணி (4+4+4+4=16). |

இந்த ஷடாங்கங்களில் மாற்றமடையக் கூடிய அங்கம் லகு மட்டுமே. இது ஜாதி பேதங்களை உடையது. லகுவை முதலில் ஒரு தட்டும், மீதி அட்சரங்களை விரல் எண்ணிக்கையுமாகப் போடவேண்டும்.

### லகுவின் வகைகள்

**1. திஸ்ர ஜாதி லகு –($1_3$):-**

இது மூன்று அட்சர எண்ணிக்கை உடையது. இதனை முதலில் ஒரு தட்டும். 2 விரல் எண்ணிக்கையுமாகப் போடவேண்டும்.

**2. சதுஸ்ர ஜாதி லகு – ($1_4$):-**

இது நான்கு அட்சர எண்ணிக்கை உடையது. இதனை முதலில் ஒரு தட்டும், பின்பு 3 விரல் எண்ணிக்கையுமாகப் போடவேண்டும்.

**3. கண்ட ஜாதி லகு – ($1_5$):-**

இது ஐந்து அட்சர எண்ணிக்கை உடையது. இதனை ஒரு தட்டும், 4 விரல் எண்ணிக்கையுமாகப் போடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. மிஸ்ர ஜாதி லகு – ($I_7$) :-**

இது ஏழு அட்சர எண்ணிக்கை உடையது. இதனை முதலில் ஒரு தட்டும், பின்பு 6 விரல் எண்ணிக்கையுமாகப் போடவேண்டும்.

**5. சங்கீர்ண ஜாதி லகு – ($I_9$) :-**

இது ஒன்பது அட்சர எண்ணிக்கை உடையது. இதனை முதலில் ஒரு தட்டும், பின்பு 8 விரல் எண்ணிக்கையுமாகப் போடவேண்டும்.

## 35 தாளங்கள்

ஜாதி பேதத்தினால் அதாவது லகுவின் மாற்றத்தால் சப்ததாளங்கள் ஒவ்வொன்றும் முறையே ஐந்து ஐந்தாக விரிவடைந்து (1x5=5) மொத்தம் (7X5=35) 35 தாளங்களாக சூளாதி தாளங்கள் கிடைக்கின்றன.

துருவதாளத்தை எடுத்துக் கொண்டால் அது திஸ்ர ஜாதி துருவம், சதுஸ்ர ஜாதி துருவம், கண்ட ஜாதி துருவம், மிஸ்ர ஜாதி துருவம், சங்கீர்ண ஜாதி துருவம் என 5 ஆகும். இவ்வாறே மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏகம் என ஒவ்வொன்றும் ஐந்து ஐந்தாக மொத்தம் 35 தாளங்கள் உண்டாகின்றன.

இந்த ஜாதி பேதமானது தாளத்திலுள்ள லகு என்ற அங்கத்திற்கு மட்டும் ஏற்புடையதாகும். மற்ற துருதம், அனுதுருதம் அங்கங்களுக்கு இந்த மாற்றங்கள் ஏற்படுவதில்லை.

சப்த தாளங்களில் ஜாதி பேதத்தினால் 35 தாளங்கள் கிடைப்பதை விளக்கும் அட்டவணை பின்வருமாறு.

### 35. சூளாதி தாளங்களின் அட்டவணை

| தாளத்தின்பெயர்கள் | திஸ்ரம் | சதுஸ்ரம் | கண்டம் | மிஸ்ரம் | சங்கீர்ணம் |
|---|---|---|---|---|---|
| துருவதாளம் | $I_3 0_2 I_3 I_3$ | $I_4 0_2 I_4 I_4$ | $I_5 0_2 I_5 I_5$ | $I_7 0_2 I_7 I_7$ | $I_9 0_2 I_9 I_9$ |
| மட்டியதாளம் | $I_3 0_2 I_3$ | $I_4 0_2 I_4$ | $I_5 0_2 I_5$ | $I_7 0_2 I_7$ | $I_9 0_2 I_9$ |
| ரூபகதாளம் | $0_2 I_3$ | $0_2 I_4$ | $0_2 I_5$ | $0_2 I_7$ | $0_2 I_9$ |
| ஜம்பைதாளம் | $I_3 U_1 0_2$ | $I_4 U_1 0_2$ | $I_5 U_1 0_2$ | $I_7 U_1 0_2$ | $I_9 U_1 0_2$ |
| திரிபுடைதாளம் | $I_3 0_2 0_2$ | $I_4 0_2 0_2$ | $I_5 0_2 0_2$ | $I_7 0_2 0_2$ | $I_9 0_2 0_2$ |
| அடதாளம் | $I_3 I_3 0_2 0_2$ | $I_4 I_4 0_2 0_2$ | $I_5 I_5 0_2 0_2$ | $I_7 I_7 0_2 0_2$ | $I_9 I_9 0_2 0_2$ |
| ஏகதாளம் | $I_3$ | $I_4$ | $I_5$ | $I_7$ | $I_9$ |

இவ்வாறாக சப்த (ஏழு) தாளங்கள் 35 சூளாதி தாளங்களாக விரிவடைகின்றன. மேலும் ஐந்துவித கதி பேதத்தினால் இந்த 35 தாளங்களும் (35X5=175) 175 தாளங்களாக விரிவடைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 175 தாளங்கள்

175 தாளங்களில் வரும் கதி பேதம் என்பது தாளத்திலுள்ள லகு, துருதம், அனுதுருதம் என்ற மூன்று அங்கங்களுக்கும் ஏற்புடையதாகும். இவ்வாறான கதிபேதங்கள் 5 வகைப்படும். அவை பின்வருமாறு.

### ஐந்துவித கதி பேதங்கள்

1. திஸ்ர கதி - தகிட - 3 அட்சர எண்ணிக்கை உடையது.
2. சதுஸ்ர கதி - தகதிமி - 4 அட்சர எண்ணிக்கை உடையது.
3. கண்ட கதி - தகதகிட - 5 அட்சர எண்ணிக்கை உடையது.
4. மிஸ்ர கதி - தகிடதகதிமி - 7 அட்சர எண்ணிக்கை உடையது.
5. சங்கீர்ண கதி - தகதிமிதகதகிட - 9 அட்சர எண்ணிக்கை உடையது.

இவ்வாறு சப்த தாளத்தில் ஒவ்வொரு தாளமும் ஜாதி பேதத்தினாலும், கதிபேதத்தினாலும் (5x5) = 25 பேதங்களை அடைகின்றன.

ஜாதிபேதம் என்பது தாளதில் உள்ள லகு என்ற ஒரு அங்கதிற்கு மட்டுமே உடையது. கதிபேதம் என்பது தாளத்தில் உள்ள அனைத்து அங்கத்திற்கும் பொருந்தும் என்பதை நினைவு கொள்வது அவசியமாகும். கதி என்பதற்கு மிகுதல், செல்லுதல், செலுத்துதல் என்றும் பொருள் கூறுவர்.

## 175 தாளங்களின் அட்டவணை

35 தாளங்கள் கதிபேதங்களினால் 175 தாளங்களாகும் முறையைக்காட்டும் பட்டியல்.

| தாளம் | | ஜாதி | மொத்த அட்சர காலம் | கதிபேதத்தினால் வரும் எண்ணிக்கையின் மொத்தம் | | | | | தாளத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | திரிச்ர கதி | சதுரச்ர கதி | கண்ட கதி | மிச்ர கதி | சங்கீர்ண கதி | |
| | 1. | திரியச்சரம் | 11 | 33 | 44 | 55 | 77 | 99 | 1 - 5 |
| | 2. | சதுரச்சரம் | 14 | 42 | 56 | 70 | 98 | 126 | 6 - 10 |
| துருவம் | 3. | கண்டம் | 17 | 51 | 68 | 85 | 119 | 153 | 11 - 15 |
| | 4. | மிச்சரம் | 23 | 69 | 92 | 115 | 161 | 207 | 16 - 20 |
| | 5. | சங்கீர்ணம் | 29 | 87 | 116 | 145 | 203 | 261 | 21 - 25 |
| | 6. | திரியச்சரம் | 8 | 24 | 32 | 40 | 56 | 72 | 26 - 30 |
| | 7. | சதுரச்சரம் | 10 | 30 | 40 | 50 | 70 | 90 | 31 - 35 |
| மட்டியம் | 8. | கண்டம் | 12 | 36 | 48 | 60 | 84 | 108 | 36 - 40 |
| | 9. | மிச்சரம் | 16 | 48 | 64 | 80 | 112 | 144 | 41 - 45 |
| | 10. | சங்கீர்ணம் | 20 | 60 | 80 | 100 | 140 | 180 | 46 - 50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தாளம் | | ஜாதி | மொத்த அட்சர காலம் | கதிபேதத்தினால் வரும் எண்ணிக்கையின் மொத்தம் | | | | | தாளத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | திரிச்ர கதி | சதுரச்ர கதி | கண்ட கதி | மிச்ர கதி | சங்கீர்ண கதி | |
| | 11. | திரியச்சரம் | 5 | 15 | 20 | 25 | 35 | 45 | 51 - 55 |
| | 12. | சதுரச்சரம் | 6 | 18 | 24 | 30 | 42 | 54 | 56 - 60 |
| ரூபகம் | 13. | கண்டம் | 7 | 21 | 28 | 35 | 49 | 63 | 61 - 65 |
| | 14. | மிச்சரம் | 9 | 27 | 36 | 45 | 63 | 81 | 66 - 70 |
| | 15. | சங்கீர்ணம் | 11 | 33 | 44 | 55 | 77 | 99 | 71 - 75 |
| | 16. | திரியச்சரம் | 6 | 18 | 24 | 30 | 42 | 54 | 76 - 80 |
| | 17. | சதுரச்சரம் | 7 | 21 | 28 | 35 | 49 | 63 | 81 - 85 |
| ஜம்பை | 18. | கண்டம் | 8 | 24 | 32 | 40 | 56 | 72 | 86 - 90 |
| | 19. | மிச்சரம் | 10 | 30 | 40 | 50 | 70 | 90 | 91 - 95 |
| | 20. | சங்கீர்ணம் | 12 | 36 | 48 | 60 | 84 | 108 | 96 - 100 |
| | 21. | திரியச்சரம் | 7 | 21 | 28 | 35 | 49 | 63 | 101 - 105 |
| | 22. | சதுரச்சரம் | 8 | 24 | 32 | 40 | 56 | 72 | 106 - 110 |
| திரிபுடை | 23. | கண்டம் | 9 | 27 | 36 | 45 | 63 | 81 | 111 - 115 |
| | 24. | மிச்சரம் | 11 | 33 | 44 | 55 | 77 | 99 | 116 - 120 |
| | 25. | சங்கீர்ணம் | 13 | 39 | 52 | 65 | 91 | 117 | 121 - 125 |
| | 26. | திரியச்சரம் | 10 | 30 | 40 | 50 | 70 | 90 | 126 - 130 |
| | 27. | சதுரச்சரம் | 12 | 36 | 48 | 60 | 84 | 108 | 131 - 135 |
| அட | 28. | கண்டம் | 14 | 42 | 56 | 70 | 98 | 126 | 136 - 140 |
| | 29. | மிச்சரம் | 18 | 54 | 72 | 90 | 126 | 162 | 141 - 145 |
| | 30. | சங்கீர்ணம் | 22 | 66 | 88 | 110 | 154 | 198 | 146 - 150 |
| | 31. | திரியச்சரம் | 3 | 9 | 12 | 15 | 21 | 27 | 151 - 155 |
| | 32. | சதுரச்சரம் | 4 | 12 | 16 | 20 | 28 | 36 | 156 - 160 |
| ஏகம் | 33. | கண்டம் | 5 | 15 | 20 | 25 | 35 | 45 | 161 - 165 |
| | 34. | மிச்சரம் | 7 | 21 | 28 | 35 | 49 | 63 | 166 - 170 |
| | 35. | சங்கீர்ணம் | 9 | 27 | 36 | 45 | 63 | 81 | 171 - 175 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசாதி, மத்தியாதி, தாளங்கள்

## தேசாதி தாளம் :-

தேசாதி தாளம் என்பது 3 தட்டுக்களையும், ஒரு வீச்சையும் உடையது. இதில் பாடலானது, வீச்சில் முக்கால் இடத்தில் (3/4,தகிட) ஆரம்பமாகும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா). | ரகுநாயகா | - | அம்சத்வனி |
| | சீதாபதே | - | கமாஸ் |
| | ஈவரகு | - | சங்கராபரணம் |
| | சரசீருஹ | - | நாட்டை |
| | கானப்ரியே | | |

## மத்தியாதி தாளம் :-

மத்தியாதி தாளம் என்பது 3 தட்டுக்களையும், ஒரு வீச்சையும் உடையது. இதில் பாடலானது வீச்சில் அரை இடத்தில் (1/2 தக) ஆரம்பமாகும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா) | நாமகுசுமாமுல | - | ஸ்ரீராகம் |
| | மேருசமான | - | மாயாமாளவகௌளை |
| | எந்துகு நிர்தய | - | அரிகாம்போதி |
| | ராக சுதாரஸ | - | ஆந்தோளிகா |

தேசாதி, மத்தியாதி தாளங்களை சிலசமயங்களில் ஆதி தாளத்தில் போடுவதுண்டு. இந்த தாளங்கள் அதிகமாகப் பயன்படுத்தியவர் தியாகராஜர் ஆவார்.

## சாப்பு தாளம்

சாப்பு தாளம் மிகப் பழமையான தாளங்களில் ஒன்று. இதனை சாபுதாளம், சாப்புத்தாளம், சார்புத்தாளம் என்றும் கூறுவர். இது கிராமிய (நாடோடி) இசையிலிருந்து கர்னாடக இசைக்கு வந்தது என்பர். இது சீர்களின் அல்லது பாடல்களில் வரும் எழுத்துக்களின் அடிப்படையாக அமைவது. இதனை 2 தட்டுக்களாக எண்ணிப் போடுவதுண்டு. வசதிக்காக சில வேளைகளில் இந்த தாளத்தை ஒரு தட்டும், ஒரு வீச்சுமாக எண்ணிப் போடுவதும் உண்டு. இந்தத் தாளம் 4 வகைப்படும்.

## சாப்பு தாளத்தின் வகைகள் :-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திஸ்ரசாப்பு | = | த + கிட | = | 3 |
| 2. | கண்ட சாப்பு | = | தக + தகிட | = | 5 |
| 3. | மிஸ்ர சாப்பு | = | தகிட + தகதிமி | = | 7 |
| 4. | சங்கீர்ண சாப்பு | = | தகதிமி + தகதகிட | = | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. திஸ்ர சாப்பு :-

திஸ்ர சாப்பு தாளத்தை முதல் தட்டுக்கு ஒரு எண்ணிக்கையும், இரண்டாவது தட்டுக்கு 2 எண்ணிக்கையுமாகப் போடவேண்டும். பல கிராமியப் (நாடோடி) பாடல்களில் இந்தத் தாளத்தைக் காணலாம்.

## 2. கண்ட சாப்பு :-

இதில் முதல் தட்டுக்கு 2 எண்ணிக்கையும், இரண்டாவது தட்டுக்கு 3 எண்ணிக்கையுமாகப் போடவேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ.கா) | 1. | தாயே திரிபுரசுந்தரி | - | சுத்தசாவேரி | (29) |
| | 2. | தாயாகி தந்தையுமாய் | - | அம்சத்வனி | (29) |
| | 3. | குழலினிது யாழினிது | - | ஸ்ரீரஞ்சனி | (22) |

## 3. மிஸ்ர சாப்பு

இதில் முதல் தட்டுக்கு 3 எண்ணிக்கையும், இரண்டாவது தட்டுக்கு 4 எண்ணிக்கையும் ஆகப் போடுவது வழக்கம். பொதுவாக சாப்பு தாளம் என்பது மிஸ்ரசாப்பு தாளத்தையே குறிக்கும். இவ்வகை சாப்புதாளத்தில் நமது கர்நாடக இசையில் பல உருப்படிகள் உள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ.கா) | 1. | முருகா முருகா | - | சாவேரி | (15) |
| | 2. | மாதா பராசக்தி | - | சாருகேசி | (26) |
| | 3. | நின்னேநம்பி | - | தோடி | (8) |
| | 4. | வானமழை நீயே | - | கல்யாணவசந்தம் | (21) |
| | 5. | கௌரி கல்யாண வைபோகமே | - | நீலாம்பரி | (29 |

## 4. சங்கீர்ண சாப்பு

இதில் முதல் தட்டுக்கு 4 எண்ணிக்கையும், இரண்டாவது தட்டுக்கு 5 எண்ணிக்கையுமாகப் போடுவது வழக்கம். சங்கீர்ண சாப்பு தாளம் சில பல்லவிகளில் அபூர்வமாகப் பயன்படுகிறது. மேலும், அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்களில் காணலாம்.

சியாமா சாஸ்திரிகள் சாப்பு தாளங்களில் பல இசை உருப்படிகளை இயற்றியுள்ளார். மேலும், விலோம சாப்பு தாளத்திலும் இவர் இயற்றியுள்ளார். அதாவது தகிட + தகதிமி (3+4) என்றில்லாமல் தகதிமி + தகிட (4+3) என்பது போல அங்கத்தினை மாற்றி இவற்றைப் போடுதல் வேண்டும். இதனையே விலோமச் சாப்பு தாளம் என்று கூறுவர். இக்காலத்தில் கண்டசாப்பு மற்றும் மிஸ்ரசாப்பு தாளங்கள் மட்டுமே மிகவும் அதிகமாகப் பழக்கத்தில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 108 தாளங்கள்

தலைச் சங்க காலத்தில் சிவபெருமான் 108 தாளங்களை ஆடலுக்காகவும் - தாண்டவத்திற்காகவும் தோற்றுவித்ததாகக் கூறுவர். இந்த 108 தாளத் தொகுப்பில் முதலில் வரும் ஐந்து தாளங்களை முறையே சிவபெருமானின் ஈசானம், தத்புருசம், அகோரம், வாமனம், சக்தியோசாதம் என்னும் ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றியதாகக் கருதுவர். அந்த 108 தாளங்கள் பின்வருமாறு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சச்சபுடம் | 8-8-4-12 | (32 எண்ணிக்கை) |
| 2. | சாசபுடம் | 8-4-4-8 | (24 எண்ணிக்கை) |
| 3. | சட்பிதாபுத்திரிகம் | 12-4-8-8-4-12 | (48 எண்ணிக்கை) |
| 4. | சம்பொற்கட்டிதம் | 12-8-8-8-12 | (48 எண்ணிக்கை) |
| 5. | உற்கட்டிதம் | 8-8-8 | (24 எண்ணிக்கை) |
| 6. | ஆதிதாளம் | 4 | (4 எண்ணிக்கை) |
| 7. | தற்பணம் | 2-2-8 | (12 எண்ணிக்கை) |
| 8. | சச்சரி | 2-3-4,2-3-4,2-3-4,2-3-4 | |
| | | 2-3-4,2-3-4,2-3-4,2-3-4 | (72 எண்ணிக்கை) |
| 9. | சிங்கலீலை | 4-2-2-2-4 | (14 எண்ணிக்கை) |
| 10. | கந்தர்ப்பம் | 2-2-4-8-8 | (24 எண்ணிக்கை) |
| 11. | சிங்கவிக்கிரமம் | 8-8-8-4-12-4-8-12 | (64 எண்ணிக்கை) |
| 12. | சீரங்கம் | 4-4-8-4-12 | (32 எண்ணிக்கை) |
| 13. | இரதலீலை | 4-4-8-8 | (24 எண்ணிக்கை) |
| 14. | அரங்கதாளம் | 2-2-2-2-2-2-2-2 | (16 எண்ணிக்கை) |
| 15. | பரிக்கிரமம் | 2-2-4-4-8 | (20 எண்ணிக்கை) |
| 16. | பிரத்தியாங்கம் | 8-8-8-4-4 | (32 எண்ணிக்கை) |
| 17. | கெசலீலை | 4-4-4-4-1 | (17 எண்ணிக்கை) |
| 18. | திரிபின்னம் | 4-8-12 | (24 எண்ணிக்கை) |
| 19. | வீரவிக்கிரமம் | 4-4-2-2-8 | (20 எண்ணிக்கை) |
| 20. | அன்னலீலை | 4-1-4-1 | (10 எண்ணிக்கை) |
| 21. | வன்னபின்னம் | 2-2-4-8 | (16 எண்ணிக்கை) |
| 22. | இராஜசூடாமணி | 2-2-4-4-4-2-2-7-/ | (32 எண்ணிக்கை) |
| 23. | அரங்கத்தியோதனம் | 8-8-8-4-12 | (40 எண்ணிக்கை) |
| 24. | இராஜதாளம் | 8-12-2-2-8-4-12 | (48 எண்ணிக்கை) |
| 25. | சிங்கவிக்கிரீடதம் | 4-4-12-8-4-8-12-8-12 | (72 எண்ணிக்கை) |
| 26. | வன்னமாலி | 2-2-2-2-4-4-2-2-8 | (28 எண்ணிக்கை) |
| 27. | சதுரச்சிரவன்னம் | 8-4-4-2-2-12 | (32 எண்ணிக்கை) |
| 28. | திரியச்சிரவன்னம் | 4-2-2-8-4-4 | (24 எண்ணிக்கை) |
| 29. | மிச்சிரவன்னம் | 2-2-2-3,2-2-2-3, 2-2-2-3, | |
| | | 12-8-2-2-8-8-4-8 | (79 எண்ணிக்கை) |
| 30. | அரங்கப்பிரதீபம் | 8-8-4-8-12 | (40 எண்ணிக்கை) |
| 31. | அன்னநாதம் | 4-12-2-2-12 | (32 எண்ணிக்கை) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 32. | சிங்கநாதம் | 4-8-8-4-8 | (32 எண்ணிக்கை) |
| 33. | மல்லிகாமோதகம் | 4-4-2-2-2-2 | (16 எண்ணிக்கை) |
| 34. | சரபலீலை | 4-4-2-2-2-2-4-4 | (24 எண்ணிக்கை) |
| 35. | அரங்காபரணம் | 8-8-4-4-12 | (36 எண்ணிக்கை) |
| 36. | சதுரங்கலீலை | 2-2-4 | (8 எண்ணிக்கை) |
| 37. | சிங்கநந்தனம் | 8-8-1-12-4-8-2-2-8-8-4 | |
| | | 12-4-12-8-4-4-16 | (128 எண்ணிக்கை) |
| 38. | செயத்திரு | 8-4-8-4-8 | (32 எண்ணிக்கை) |
| 39. | விஜயநந்தனம் | 4-4-8-8-8 | (32 எண்ணிக்கை) |
| 40. | பிரதிதாளம் | 4-4-2-2 | (12 எண்ணிக்கை) |
| 41. | துதியகம் | 4-2-2 | (8 எண்ணிக்கை) |
| 42. | மகரந்தம் | 2-2-4-4-4-8 | (24 எண்ணிக்கை) |
| 43. | கீர்த்திதாளம் | 8-4-12-8-4-12 | (48 எண்ணிக்கை) |
| 44. | விஜயதாளம் | 12-8-12-8 | (40 எண்ணிக்கை) |
| 45. | ஜெயமங்கலம் | 4-4-8-4-4-8 | (32 எண்ணிக்கை) |
| 46. | இராஜவித்தியாதரம் | 4-8-2-25 | (16 எண்ணிக்கை) |
| 47. | ஆரோகிமட்டம் | 4-4-8-2-2-2-2 | (24 எண்ணிக்கை) |
| 48. | பிரகாசமட்டம் | 4-4-4-8-4-4 | (28 எண்ணிக்கை) |
| 49. | செயதாளம் | 4-8-4-4-2-2-12 | (36 எண்ணிக்கை) |
| 50. | குடுக்கதாளம் | 2-2-4-4 | (12 எண்ணிக்கை) |
| 51. | நிச்சாரூபகம் | 4-4-1 | (9 எண்ணிக்கை) |
| 52. | கிரீடைதாளம் | 2-2-1 | (5 எண்ணிக்கை) |
| 53. | திரிபங்கிதாளம் | 4-8-4-8 | (24 எண்ணிக்கை) |
| 54. | கோகிலப்பிரியா | 8-4-12 | (24 எண்ணிக்கை) |
| 55. | திருகீர்த்தி | 8-8-4-4 | (24 எண்ணிக்கை) |
| 56. | விந்துமாலி | 8-2-2-2-2-8 | (24 எண்ணிக்கை) |
| 57. | சமதாளம் | 4-4-2-3 | (13 எண்ணிக்கை) |
| 58. | நந்தனம் | 4-4-2-2-12 | (24 எண்ணிக்கை) |
| 59. | உத்திரக்கணம் | 4-4-8 | (16 எண்ணிக்கை) |
| 60. | மதியிடங்கி | 8-2-2-8 | (20 எண்ணிக்கை) |
| 61. | வண்ணமட்டிகை | 4-4-2-2-4-2-2 | (20 எண்ணிக்கை) |
| 62. | அபிநந்தனம் | 4-2-4-2-3 | (20 எண்ணிக்கை) |
| 63. | அந்தரக்கிரீடை | 2-3-2 | (7 எண்ணிக்கை) |
| 64. | மல்லதாளம் | 4-4-4-4-2-3 | (21 எண்ணிக்கை) |
| 65. | தீபகம் | 2-2-4-4-8-8 | (28 எண்ணிக்கை) |
| 66. | அனங்கதாளம் | 4-12-4-4-8-12 | (44 எண்ணிக்கை) |
| 67. | விசமதாளம் | 2-2-2-3, 2-2-2-3 | (18 எண்ணிக்கை) |
| 68. | நாந்திதாளம் | 4-4-2-2-4-4-8-8 | (36 எண்ணிக்கை) |
| 69. | குந்ததாளம் | 4-4-4-4-8 | (24 எண்ணிக்கை) |
| 70. | முகுந்ததாளம் | 4-2-2-4-8 | (20 எண்ணிக்கை) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 71. | ஏகதாளம் | 2 | (2 எண்ணிக்கை) |
| 72. | பூரணகங்காளம் | 2-2-2-2-8-4 | (20 எண்ணிக்கை) |
| 73. | கண்டகங்காளம் | 2-2-8-8 | (20 எண்ணிக்கை) |
| 74. | சமகங்காளம் | 8-8-4 | (20 எண்ணிக்கை) |
| 75. | விடமகங்காளம் | 4-8-8 | (20 எண்ணிக்கை) |
| 76. | சதுரத்தாளம் | 8-2-2-2 | (14 எண்ணிக்கை) |
| 77. | தோம்புளிதாளம் | 4-4-4-1 | (13 எண்ணிக்கை) |
| 78. | அபங்கதாளம் | 4-12 | (16 எண்ணிக்கை) |
| 79. | இராசவங்காளம் | 8-4-8-2-2 | (24 எண்ணிக்கை) |
| 80. | இலகுசேகரம் | 4-1 | (5 எண்ணிக்கை) |
| 81. | பிரதாபசேகரம் | 12-2-3 | (17 எண்ணிக்கை) |
| 82. | செகற்சம்பை | 8-2-3 | (13 எண்ணிக்கை) |
| 83. | துரிதசேகரம் | 3 | (3 எண்ணிக்கை) |
| 84. | சதுர்முகன் | 4-8-4-12 | (28 எண்ணிக்கை) |
| 85. | பின்னசதுமுகன் | 12-4 | (16 எண்ணிக்கை) |
| 86. | சம்பைமட்டம் | 2-3-4 | (9 எண்ணிக்கை) |
| 87. | பிரதிமட்டம் | 4-4-8-8-4-4 | (32 எண்ணிக்கை) |
| 88. | திரிதீயதாளம் | 2-2-3 | (7 எண்ணிக்கை) |
| 89. | வயந்தம் | 4-4-4-8-8-8 | (36 எண்ணிக்கை) |
| 90. | இலளித்தம் | 4-2-3 | (9 எண்ணிக்கை) |
| 91. | இரதிதாளம் | 4-8 | (12 எண்ணிக்கை) |
| 92. | கருணையதி | 2-2-2-2 | (8 எண்ணிக்கை) |
| 93. | சட்டதாளம் | 2-2-2-2-2-2 | (12 எண்ணிக்கை) |
| 94. | வர்த்தனம் | 2-2-4-12 | (20 எண்ணிக்கை) |
| 95. | வன்னமதி | 4-4-12-12 | (32 எண்ணிக்கை) |
| 96. | இராஜநாராயணம் | 2-2-4-8-4-8 | (28 எண்ணிக்கை) |
| 97. | மதனதாளம் | 8-2-2 | (12 எண்ணிக்கை) |
| 98. | பார்வதிலோச்சனம் | 2-2-4-4-2-2-8-4-8-<br>4-4-4-8-4-4 | (64 எண்ணிக்கை) |
| 99. | காருதிதாளம் | 2-2-2-3 | (9 எண்ணிக்கை) |
| 100. | சீனந்தனம் | 8-4-4-12 | (28 எண்ணிக்கை) |
| 101. | செயதாளம் | 4-8-4-4-2-2 | (24 எண்ணிக்கை) |
| 102. | இலயதாளம் | 2-4-2-12 | (20 எண்ணிக்கை) |
| 103. | விலோகிதம் | 4-8-2-2-12 | (28 எண்ணிக்கை) |
| 104. | இலலிதப்பிரியம் | 4-4-8-4-8 | (28 எண்ணிக்கை) |
| 105. | தகனதாளம் | 4-4-4-4-8-8-4-4-8-8-8 | (64 எண்ணிக்கை) |
| 106. | இலக்குமீசன் | 4-4-2-3-12 | (25 எண்ணிக்கை) |
| 107. | இராசவர்த்தனம் | 2-2-1-4-12 | (21 எண்ணிக்கை) |
| 108. | பெத்தாபரணம் | 4-12-4 | (20 எண்ணிக்கை) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சதாளங்கள்

108 தாளங்களில் முதலில் வரும் ஐந்து தாளங்களான சச்சபுடம், சாசபுடம், சட்பிதாபுத்திரிகம், சம்பொற்கட்டிதம், உற்கட்டிதம் ஆகியவற்றை முற்காலத்தில் தனியாகப் பிரித்து பஞ்சதாளங்கள் என்று வகைப்படுத்தியுள்ளனர். இவை நாட்டியத்திலும், இசையிலும் மிகவும் அதிகமாகப் புழக்கத்தில் இருந்துள்ளன. எனவே இவற்றின் இழப்பீட்டினைத் தவிர்ப்பதற்காக இடைக்காலத்தில்

| | | | |
|---|---|---|---|
| (தாளம் எண்.56) | ஆதிமட்டிகை | 2-3-4-4 | (13 எண்ணிக்கை) |
| (தாளம் எண்.67) | அன்னியமுகுந்தம் | 4-2-2-2-2-8 | (20 எண்ணிக்கை) |
| (தாளம் எண்.84) | திருமாத்திரிகை | 12 | (12 எண்ணிக்கை) |
| (தாளம் எண்.98) | விற்புரம் | 8-8-8-4-2-8-8-2-2 | (50 எண்ணிக்கை) |
| (தாளம் எண்.101) | ஜகன்மோகனதாளம் | 4-8-4-2-2-12 | (32 எண்ணிக்கை) |

என்னும் 5 தாளங்களையும் 108 தாளப் பெயர்ப்பட்டியலில் புதிதாக இணைத்துள்ளனர். 108 தாளங்களின் பெயர்களும், அதன் அங்கங்களும் தமிழ் மற்றும் வடமொழி நூல்களில் பலவாறு மாற்றங்கள் பெற்றுள்ளதையும், இக்காலத்தில் வழக்கத்தில் இல்லாமல் உள்ளதையும் அறியமுடிகின்றது.

## நவசந்தி தாளங்கள்

ஆலயங்களில் பிரம்மோற்சவத்தின் முதல்நாள் நவசந்தி (9 திசை) தெய்வங்களுக்கும் பூஜை நடத்தப்படும். அந்தந்தத் திக்கிலுள்ள தெய்வங்களுக்கும் வழிபாடு செய்துவிட்டுப் பிறகு திருவிழா தொடர்ந்து நடைபெறுவது வழக்கமாகும் இந்த நவசந்திகளுக்கும் என்று ஒன்பது தாளங்கள் உள்ளன. அந்தந்தத் தாளங்களில்தான் ஒவ்வொரு சந்தியிலும் நிகழ்ச்சி நடைபெறும். இவ்வாறு ஒவ்வொரு சந்திக்கும் என்று தனித்தனியாகத் தாளம், இராகம், பண், நாட்டியம், இசைக்கருவி, சுலோகம் ஆகியவை மரபாக அமைந்துள்ளன.

**1. பிரம்ம சந்திக்கு** (மத்திய பாகம்) துவஜஸ்தம்பம் அருகில் பிரம்மதாளம் இடம்பெறும். இது 4-8-4-12 என்று ஏழு மாத்திரையும், 28 எண்ணிக்கையும் கொண்டது. இதில் மத்தியமாவதி இராகம், மேகராகக்குறிஞ்சிப் பண், கமல நிருத்தம், சமபாதம் நடனம், சச்சபுட லய வாத்தியம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் சதுஸ்ர ஜாதி திருப்புடை தாளம் உள்ளது.

**2. இந்திர சந்திக்கு** (கிழக்குத் திசை) இந்திரதாளம் இடம்பெறும். இது 4-4-8-4-2-1-2 என்று ஆறேகால் மாத்திரையும், 25 எண்ணிக்கையும் கொண்டது. இதில் குர்ஜரி இராகம், காந்தாரம் பண், புஜங்க லளிதம் நிருத்தம், புஜங்க நடனம், சாசபுடம் வாத்தியம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் திஸ்ர ஜாதி திருப்புடைதாளம் உள்ளது.

**3. அக்னி சந்திக்கு** (தென்கிழக்குத் திசை) மத்தாபணம் தாளம் இடம்பெறும். இது 4-2-4-2-4 என்று நான்கு மாத்திரையும், 16 எண்ணிக்கையும் கொண்டது. இதில் நாட்டை இராகம், கொல்லிப்பண், மந்தள நிருத்தம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் சதுஸ்ர ஜாதி ஜம்பை தாளம் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. எமசந்திக்கு** (தெற்குத் திசை) பிருங்கி தாளம் இடம்பெறும். இது 4-8-4-4 என்று ஐந்து மாத்திரையும், 20 எண்ணிக்கையும் கொண்டது. இதில் தேசாட்சி இராகம், கௌசிகம் பண், தெண்டபாதம் நிருத்தம், லளித வாத்தியம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் சதுஸ்ர ஜாதி லகு தாளம் உள்ளது.

**5. நிருதி சந்திக்கு** (தென்மேற்குத் திசை) நைருதி தாளம் இடம்பெறும். இது 4-4-4-42-2 என்று ஐந்து மாத்திரையும், 20 எண்ணிக்கையும் கொண்டது. இதில் குந்தல இராகம், நட்டபாடைப் பண், புஜங்கத்திராசம் நிருத்தம், பிரதிமட்டியம் வாத்தியம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் திஸ்ர ஜாதி வகு தாளம் உள்ளது.

**6. வருணசந்திக்கு** (மேற்குத் திசை) நவதாளம் இடம்பெறும். இது 4-2-2-24 என்று மூன்றரைை மாத்திரையும், 14 எண்ணிக்கையும் கொண்டது. இதில் வராளி இராகம், சீகாமரம் பண், குஞ்சித நிருத்தம், சிம்மநந்தனம் வாத்தியம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் சிம்மநந்தன தாளம் உள்ளது.

**7. வாயுசந்திக்கு** (வடமேற்குத் திசை) பலிதாளம் இடம்பெறும். இது 2-2-2-4 என்று இரண்டரை மாத்திரையும், 10 எண்ணிக்கையும் கொண்டது. இதில் இராமகிரி இராகம், தக்கேசிப் பண், காந்தி நிருத்தம், பஞ்ச வாத்தியம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் பஞ்சவாத்தியம் தாளம் உள்ளது.

**8. குபேர சந்திக்கு** (வடக்குத் திசை) கொட்டரி தாளம் இடம் பெறும். இது 4-8-8-12 என்று எட்டு மாத்திரையும், 32 எண்ணிக்கையும் கொண்டது. இதில் மாளவஸ்ரீ ராகம், தக்கராகப்பண், சந்தியா நிருத்தம், அகுஞ்சித பாதம் நடனம், கந்தர்ப்ப வாத்தியம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் திஸ்ர ஜாதி லகு தாளம் உள்ளது.

**9. ஈசான்ய சந்திக்கு** (வடகிழக்குத் திசை) டக்கரி தாளம் இடம்பெறும். இது 8-4-8 என்று ஐந்து மாத்திரையும், 20 எண்ணிக்கையும் கொண்டது. இதில் மலகரி ராகம், அந்தாளிப்பண், பிரம்மரி நிருத்தம், பிரம்மாரிகம் நடனம் அனுமகும்பம் வாத்தியம் நிகழ்த்தப்படும். இக்காலத்தில் இதில் அனுமகும்பம் தாளம் உள்ளது.

பூஜையின் இறுதியில் அஷ்டதச வாத்தியம் (பதினெட்டு வாத்தியம்) முழுங்கும். இவற்றில் ஒரு சந்திக்கு உள்ள தாளத்தையோ அல்லது மற்றவற்றையோ மறுசந்திக்கு மாற்றி இயக்குதல் கூடாது என்பது மரபுவழி வந்த வழக்கமாகும். இவை இராசராச சோழனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி.985-1014) நடைமுறைக்கு வந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. தாளத்தின் 10 உயிர்த் தன்மைகள்

(தாள தசப்பிராணங்கள்)

மனித உடலுக்கு நிலைக்கலனாகப் பத்து வாயுக்கள் உள்ளன. இவற்றைத் தச வாயுக்கள் என்பர். அது போல் தாளத்திற்கும் 10 உயிர்நிலைகள் உண்டு. இதனைத் தாள தசப் பிராணன் (தசப் பிராணங்கள், தசப் பிரமாணங்கள்) என்று அழைப்பர். இவை தாளத்தின் உயிர்நாடியாகவும், உயிர்த்தன்மையாகவும், உயர்நிலையாகவும் உள்ளன.

இவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | காலம் | (நேரம்) | 6. | சாதி | (இனம்) |
| 2. | மார்க்கம் | (வழி) | 7. | களை | (மாத்திரை) |
| 3. | கிரியை | (செய்கை) | 8. | லயம் | (இடைவெளி) |
| 4. | அங்கம் | (உறுப்பு) | 9. | யதி | (அமைப்பு) |
| 5. | கிரகம் | (இடம்) | 10. | பிரத்தாரம் | (விரிவு) |

ஆகிய பத்துக் குறியீடுகளாகும். இவற்றில் முதல் ஐந்தை மகா பிராணன் என்றும், பிந்திய ஐந்தை உப பிராணன் என்றும் வடநூல்கள் கூறுகின்றன.

### 1. காலம் (நேரம்) :-

இது தாளத்தின் ஒவ்வோர் எண்ணிக்கையின் கால அளவையும் நிர்ணயிக்கிறது. எனவே, தாளத்தின் போக்கையும், பாட்டு செல்லும் வேகத்தையும் இணைப்பது காலம் ஆகும்.

இசை பயிலத் தொடங்கும் போது, ஒரு தாள அட்சர எண்ணிக்கைக்கு ஒரு சுவரமாகப் பாடுவதை முதல் காலம் எனவும், ஒரு தாள அட்சர எண்ணிக்கைக்கு இரண்டு சுவரங்களாகப் பாடுவதை இரண்டாம் காலம் எனவும், ஒரு தாள அட்சர எண்ணிக்கைக்கு நான்கு சுவரங்களாகப் பாடுவதை மூன்றாம் காலம் எனவும் வரையறுத்து, அப்பியாச வரிசைகள் அனைத்தும் கற்றுத்தரப்படுகின்றன.

வர்ணங்கள், கீர்த்தனைகள், கிருதிகள் ஆகியவற்றைப் பாடும்பொழுது ஒரு தாள அட்சர எண்ணிக்கைக்கு நான்கு சுவரங்கள் என்ற வகையில் முதல்காலத்தையும், எட்டு சுவரங்கள் என்ற வகையில் இரண்டாவது காலத்தையும், பதினாறு சுவரங்கள் என்ற வகையில் மூன்றாவது காலத்தையும் பயின்று வருகின்றோம். எனவே சபாகானங்கள் அனைத்தும் இவ்வாறே பாடப்படுகின்றன.

### 2. மார்க்கம் (அளவு, வழி) :-

மார்க்கம் என்றால் வழி என்று பொருள். ஓர் இசை வடிவத்தில் ஒரு தாள அட்சர எண்ணிக்கைக்கு எத்தனை சுவரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று நாம் காணுவதையே அந்த இசை வடிவத்தின் மார்க்கம் என்றுகூறுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கங்கள் 6 வகைப்படும். அவற்றை ஷண்மார்க்கங்கள் என்றும் அழைப்பர்.

| எண் | பெயர்கள் | ஒரு தாள அட்சரத்திற்கு எடுத்துக் கொள்ளும் அளவு | |
|---|---|---|---|
| | | மாத்திரை | சுவரங்கள் |
| 1. | தட்சிண மார்க்கம் | 8 | 32 |
| 2. | வார்த்திக மார்க்கம் | 4 | 16 |
| 3. | சித்திர மார்க்கம் | 2 | 8 |
| 4. | சித்திர தர மார்க்கம் | 1 | 4 |
| 5. | சித்திர தம மார்க்கம் | 1/2 | 2 |
| 6. | அதிசித்திர தம மார்க்கம் | 1/4 | 1 |

மேலே கூறப்பட்டுள்ள 6 மார்க்கங்களில் முதல் மூன்று மார்க்கங்களும் அதாவது தட்சிணமார்க்கம், வார்த்திக மார்க்கம், சித்திர மார்க்கங்கள் பல்லவி பாடும் சமயத்தில்தான் பயன்படுத்தப்படுகின்றன. எஞ்சியுள்ள மூன்று மார்க்கங்களும் அதாவது சித்திர தர, சித்திர தம மார்க்கம் கிருதி. கீர்த்தனை வர்ணங்களிலும், அதிசித்திர தம மார்க்கம் கீதங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன.

எடுத்துக்காட்டுகள் :-

**சித்திர தர மார்க்கம் :-**

1. ஆடிக்கொண்டார் - மாயாமாளவகௌளை - முத்துத் தாண்டவர்
2. பாமாலை - அரிகாம்போதி - பாபநாசம் சிவன்
3. மாயவித்தை - கரகரப்பிரியா - முத்துத் தண்டவர்
4. சபாபதிக்கு - ஆபோகி - கோபாலகிருஷ்ணபாரதியார்
5. மயில் வாகனா - மோகனம் - பாபநாசம் சிவன்

முதலிய கீர்த்தனைகளில் சித்திரதர மார்க்கம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

**சித்திர தம மார்க்கம் :**

1. ஸ்ரீ காந்திமதி - ஹேமவதி - முத்துசுவாமி தீட்சிதர்
2. பாலிம்சுகாமாக்ஷி - மத்யமாவதி - சியாமா சாஸ்திரி
3. ஸ்ரீ சுப்ரமண்யாய - காம்போதி - முத்துசுவாமி தீட்சிதர்
4. எந்துகு பெத்ல - சங்கராபரணம் - தியாகராஜர்

சித்திர தம மார்க்கமானது சௌக்ககால கிருதி, கீர்த்தனைகளில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் பொதுவாகவே வர்ணங்கள் அனைத்திலும் சித்திர தம மார்க்கமே பயன்படுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிசித்திர தம மார்க்கம் :**

1. கணநாதா - மாயாமாளவகௌளை - க.பொன்னையாபிள்ளை
2. சுவாமிநாதா - சுத்தசாவேரி - பெரியசாமித்தூரன்
3. ஏழுமலைமேல் - சங்கராபரணம் - டைகர் வரதாச்சாரியார்.

பொதுவாகவே கீதங்கள் அனைத்தும் அதி சித்திர தம மார்க்கத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளன.

## 3. கிரியை (செய்கை) :-

இது தாளத்தை எப்படிப் போடவேண்டும் என்ற செய்கை முறைகளைக் குறிக்கும். எனவே தாளத்தின் அங்கங்களைக் கைச்செய்கைகளின் மூலம் காட்டுவதே கிரியை ஆகும். இது அட்சர காலங்களை எண்ணும் முறையைக் குறிக்கின்றது. தாளத்தில் வரும் தட்டு, வீச்சு, விரல் எண்ணிக்கை முதலியவைகள் வெவ்வேறு கிரியைகளாகும். இத்தகைய கிரியைகளினால்தான் நாம் தாளத்தின் அங்கங்களை வேறுபடுத்துகிறோம்.

இவ்வாறான கிரியைகள் இரண்டு வகைப்படும்.

### 1. சசப்த கிரியை

இது சப்தத்துடன் கூடிய கிரியை ஆகும். தாளத்தின் அங்கங்களைக் கைகளினால் ஓசையுடன் காட்டும்போது அதற்குச் சசப்த கிரியை என்றுபெயர்.

உதாரணம் : தட்டு அல்லது சிட்டிகை
அனுதுருதத்தின் கிரியை (தட்டு)
துருதத்தின் ஆரம்பத்தட்டு
லகுவின் ஆரம்பத்தட்டு
குரு, புலுதம், காகபாதம்

ஆகியவைகளின் ஆரம்பத்தட்டு இவையனைத்தும் சசப்த கிரியை ஆகும்.

### 2. நிசப்த கிரியை

இது சப்தமற்ற (நிசப்த) கிரியை ஆகும். தாளத்தின் அங்கங்களை கைகளினால் ஓசையின்றிக் காட்டும்பொழுது, அதற்கு நிசப்த கிரியை என்று பெயர்.

உதாரணம் : துருதத்தின் வீச்சு
லகுவின் விரல் எண்ணிக்கை
குரு, புலுதம், காகபாதம்

இவைகளின் ஆரம்பத்தட்டினைத் தொடர்ந்து வரும் கிரியைகள் ஆகியன நிசப்த கிரியைகளாகும்.

இவ்விரண்டு விதமான கிரியைகளையும் நாம் துருதத்திலும், லகுவிலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. அங்கம் (உறுப்பு) :-**

இது தாளங்களைத் தொகுக்கும் ாகல அளவையாகும். இவைகளைக் கொண்டுதான் கிரியை செய்து தாளம் போடவேண்டும்.

தாளத்தில் உள்ள பல்வேறு பகுதிகளை அதன் அங்கங்கள் என்று கூறுகிறோம். இவை 6 வகைப்படும். இவற்றை ஷடாங்கங்கள் (ஆறுறுப்பு) என்று கூறுவர்.

| பெயர்கள் | குறியீடு | அட்சர எண்ணிக்கை | தாளம் போடும் விதம் |
|---|---|---|---|
| 1. அனுதுருதம் | ◡ | 1 | ஒரு தட்டு |
| 2. துருதம் | 0 | 2 | ஒரு தட்டும், ஒரு வீச்சும். |
| 3. லகு | I | 3,4,5,7,9 | ஒரு தட்டும், விரல் எண்ணிக்கையும். |
| 4. குரு | 8 | 8 | ஒரு தட்டு, கையைமூடிக்கொண்டு வட்டமாகச் சுற்றுதல் (4+4=8) |
| 5. புலுதம் | I<br>8 | 12 | ஒரு தட்டு, ஒரு கிருஷ்யை ஒரு சர்ப்பிணி (4+4+4=12) |
| 6. காகபாதம் | + | 16 | ஒரு தட்டு, ஒரு பதாகம், ஒரு கிருஷ்யை, ஒரு சர்ப்பிணி(4+4+4+4=16) |

முதல் மூன்று அங்கங்களான அனுதுருதம், துருதம், லகு ஆகிய மூன்றும் ஏழு (சப்த) தாளங்களில் (7x35x175) வருவதை நாம் காண்கிறோம். மற்ற குரு, புலுதம், காகபாதம் ஆகிய மூன்று அங்கங்களும் 108 தாளங்களில் இடம்பெறுகின்றன.

ஷடாங்கங்களுடன் விராமம் என்றும் ஓர் அங்கத்தை வெவ்வேறு இடங்களில் பொருத்தமாகச் சேர்க்கும்போது ஷோடசாங்கங்கள் என்று அழைக்கப்படும் 16 பிரிவுகளை நாம் பெறமுடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷோடசாங்கங்கள் (பதினாறுறுப்பு)

| எண் | பெயர்கள் | குறியீடு | அட்சர எண்ணிக்கை | மாத்திரை அன்று | மாத்திரை இன்று |
|---|---|---|---|---|---|
| 1 | அனுதுருதம் | ◡ | 1 | (1/4) | 4 |
| 2 | துருதம் | 0 | 2 | (1/2) | 8 |
| 3 | துருத விராமம் | ◡0 | 3 | (3/4) | 12 |
| 4 | லகு | I | 4 | (1) | 16 |
| 5 | லகுவிராமம் | ◡I | 5 | (1.1/4) | 20 |
| 6 | லகு துருதம் | 0I | 6 | (1.1/2) | 24 |
| 7 | லகுதுருதவிராமம் | ◡0I | 7 | (1.3/4) | 28 |
| 8 | குரு | 8 | 8 | (2) | 32 |
| 9 | குரு விராமம் | ◡8 | 9 | (2.1/4) | 36 |
| 10 | குரு துருதம் | 08 | 10 | (2.1/2) | 40 |
| 11 | குரு துருதவிராமம் | ◡08 | 11 | (2.3/4) | 44 |
| 12 | புலுதம் | I8 | 12 | (3) | 48 |
| 13 | புலுத விராமம் | ◡I8 | 13 | (3.1/4) | 52 |
| 14 | புலுத துருதம் | 0I8 | 14 | (3.1/2) | 56 |
| 15 | புலுத துருத விராமம் | ◡0I8 | 15 | (3.3/4) | 60 |
| 16 | காகபாதம் | + | 16 | (4) | 64 |

### 5. கிரஹம் (எடுப்பு, இடம்) :-

இது பாட்டை எடுத்தல் அல்லது தொடங்குதல் என்று பொருள்படும். அதாவது தாளத்தில் பாட்டைத் துவக்கும் இடத்தைக் குறிப்பதாகும். இது சமம், விசமம் என்று இரண்டு வகைப்படும். இதில் விசமம் என்பது அதீதம், அனாகதம் என்று இரண்டு வகைப்படும்.

கிரஹம்
- சம கிரஹம்
- விசம கிரஹம்
  - அதீத கிரஹம்
  - அனாகத கிரஹம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தாளமும் பாட்டும் ஒன்றாய் வருவது சம எடுப்பாகும்.


2. தாள ஆரம்ப முதல் சர்ப்பகதியைப் போல் பாட்டு மாறி மாறி வருவது விசம எடுப்பாகும்.

3. தாளத்திற்கு முன்பு பாட்டைத் தொடங்குவது அதீத எடுப்பாகும்.

4. தாளத்திற்குப் பின்பு பாட்டைத் தொடங்குவது அனாகத் எடுப்பாகும்.

### சமகிரஹம் :-

தாள ஆவர்த்தம் தொடங்கும் அதே சமயத்தில் பாட்டும் ஆரம்பமானால் அதற்குச் சம கிரஹம் என்று பெயர்.





இசையில் பல கிருதிகளும், கீர்த்தனைகளும், உருப்படிகளும் இந்தச் சம எடுப்பில் தொடங்குகின்றன.

உ.ம்:

1. மயில்வாகனா - மோகனம் - பாபநாசம் சிவன்
2. சபாபதிக்கு - ஆபோகி - கோபாலகிருஷ்ணபாரதியார்
3. பாமாலைக்கிணை - அரிகாம்போதி - பாபநாசம் சிவன்

### அதீத கிரஹம் :-

தாள ஆவர்த்தம் துவங்கும் முன்பே பாட்டு ஆரம்பிக்குமானால் அது அதீத கிரஹம்




உ.ம் : முகாரி ராகத்தில் அமைந்துள்ள சிவகாம சுந்தரி என்னும் பாடலைக் கூறலாம்.

| ; ; ; ; ; ; ; ; | ; ; ; ; | சி வ ||
| கா... ம.. சுந்... .த | ரீ......... |............ ||

அதாவது முந்தின தாளத்தின் முடிவில் பாடல் ஆரம்பமாகிறது. பாடல்களில் மிக அபூர்வமாகத்தான் இந்தத்தாளம் கையாளப்படுகின்றது.

### அனாகத் கிரஹம் :-

தாளம் ஆரம்பித்தபின் சிறிது தள்ளி பாடல் ஆரம்பிப்பதை அனாகத கிரஹம் என்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| உ.ம்: | 1. மாதா பராசக்தி | - மிஸ்ர சாபு | - | சாருகேசி |
| | 2. மாய வித்தை | - ஆதிதாளம் | - | கரகரப்பிரியா |
| | 3. ஞானமொ.சகராதா | - ரூபகம் | - | பூர்விகல்யாணி. |

மற்றும் கண்ட ஜாதி அடதாள வர்ணங்கள் அனைத்திலும் இந்தத் தாளம் கையாளப்படுகின்றது.

இக்காலத்தில் தாளத்தின் அட்சரம் ஒன்றுக்கு அடங்கிய காலப் பிரமாணத்தை 4 கூறுகாளகப் பிரித்து, அவைகளைச் சமம், கால், அரை, மக்கால் என்ற முறைப்படி வழங்கி வருகின்றோம். இதில் சம இடத்தைச்சமம் என்றும், கால் இடத்தை அதீதம் என்றும், அரை இடத்தை விசமம் என்றும், முக்கால் இடத்தை அனாகதம் என்றும் கூறுவது வழக்கமாக உள்ளது.

### 6. ஜாதி (பிரிவு, வகை, இனம்) :-

ஜாதி என்பது லகுவின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. 35 தாளத்தில் வரும் லகு என்ற ஒரு அங்கத்திற்கு மட்டுமே இந்த ஜாதி பேதம் உண்டு. (175 கதிபேதத் தாளத்தில் லகு, துருதம், அனுதுருதம் என்ற மூன்று அங்கங்களுக்கும் ஜாதி பேதம் உண்டு)

ஜாதி 5 வகைப்படும். இசையில் அடிப்படையான துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏகம் என்ற 7 தாளங்களும் இந்த ஐந்து ஜாதி பேதங்களினால்தான் 35 தாளங்களாக விரிவடைகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திஸ்ர ஜாதி லகு | - | $l_3$ | (மூன்று அட்சர எண்ணிக்கை) |
| 2. | சதஸ்ர ஜாதி லகு | - | $l_4$ | (நான்கு அட்சர எண்ணிக்கை) |
| 3. | கண்ட ஜாதி லகு | - | $l_5$ | (ஐந்து அட்சர எண்ணிக்கை) |
| 4. | மிஸ்ர ஜாதி லகு | - | $l_7$ | (ஏழு அட்சர எண்ணிக்கை) |
| 5. | சங்கீர்ண ஜாதி லகு | - | $l_9$ | (ஒன்பது அட்சர எண்ணிக்கை) |

### 7. களை (மாத்திரை) :-

பாட்டில் இடம்பெறும் சொற்களை நேரசை, நிரையசை என்று விவரிப்பதுபோல் தாளத்தின் காலப் பிரமாணம் களைகளினால் விவசரிக்கப்படுகின்றது. இது தாளங்களுக்குரிய கால நிர்ணயத்தை முடிவு செய்கின்றது. ஒரு தாள் அட்சரத்தின் சிறு பகுதிக்குகளை என்று பெயர். இது மூன்று வகைப்படும் என்று சங்கீத ரத்னாகரம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1. ஏக களை** : ஒரு தாள அட்சரத்திற்கு (எண்ணிக்கை) நான்கு சுவரமாக அல்லது எழுத்தாகப் பாடுவது.

**2. துவி களை** : ஒரு தாள அட்சரத்திற்கு (எண்ணிக்கை) எட்டு சுவரமாக அல்லது எழுத்தாகப் பாடுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. சதுர் கலை :** ஒரு தாள அட்சரத்திற்கு (எண்ணிக்கை) பதினாறு சுவரமாக வைத்துப் பாடுவது.

பாடுகிறபொழுது, குறுகிய 3-ஆம் காலத்தில் 4 சுவரம் (4 மாத்திரை) வரக்கூடிய 1 அட்சர அளவை ஒரு களையென்றும், 8 சுவரம் (8 மாத்திரை) கொண்ட ஓர் அளவை இரண்டு களையென்றும், 16 சுவரம் (16 மாத்திரை) கொண்ட ஒரு அட்சர அளவை நான்கு களையென்றும் வழங்கிவருகின்றோம். எனவேகளை என்பது ஒரு தட்டின் அளவுக்குள் நான்கு மாத்திரைகள் (தகதிமி) என்று வருவதாகும். இவற்றில் வர்ணங்களிலும், கிருதிகளிலும், கீர்த்தனைகளிலும் ஏககளையும், கீதங்களில் துவிகளையும், பல்லவிகளில் சதுர்களையும் வைத்துப்பாடுகின்றோம்.

## 8. லயம் (இடைவெளி) :-

தாளத்தின் காலப் பிரமாணத்தை லயம் என்பர். இலயித்தல், ஒன்றுதல் அல்லது இசைந்திருத்தல் என்னும் பொருள் கொண்ட இச்சொல் தாளத்தில் வேகத்தையும், காலப் பிரமாணத்தையும் நிலைநிறுத்துவதாகும். இந்த லயம் மூன்று வகைப்படும்.

**1. விளம்பித லயம் :-** (சௌக்க காலம்) இதில் தாளத்தின் போக்கு மெதுவாகச் செல்லும். (எ.கா)
ஸ்ரீ காந்திமதி – ஹேமவதி – ஆதிதாளம் – முத்துசுவாமி தீட்சிதர்

**2. மத்தியம லயம் :-** (மத்யம காலம்) இதில் தாளத்தின் போக்கு நடுத்தரமாகச் செல்லும். (எ.கா)
மாயவித்தை செய்கிறானே – கரகரப்பிரியா – ஆதி – முத்துத்தாண்டவர்

**3. துரித லயம் :-** (துரித காலம்) இதில் தாளத்தின் போக்கு வேகமாகச் செல்லும் (எ.கா)
பிரம்ம மொகட்டே – பௌளி – அன்னமாச்சாரியார்.

பஞ்சமரபு என்னும் நூல் மார்க்கம் பகுதியில் வரும் 6 காலங்களில் தட்சிணம், வார்த்திகம் காலங்களை விளம்ப லயமாகவும். சித்திரம், சித்திரதரம் காலங்களை மத்தியம லயமாகவும், அர்த்த சித்திரம், அதி சித்திரம் காலங்களை துரித லயமாகவும் குறிப்பிடுகின்றது. வடமொழி நூல்களில் அதி நுட்பமான காலப் பிரமாணங்களையும் குறிக்கும் வகையில் இம் மூன்றுவிதமான லயங்களில் ஒவ்வொன்றையும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | விளம்பித | - | விளம்பம் | (அதி சௌக்க காலம் |
| | விளம்பித | - | மத்தியம் | (சௌக்க காலம்) |
| | விளம்பித | - | துரிதம் | (சுமார் சௌக்க காலம்) |
| 2. | மத்தியம | - | விளம்பரம் | (சௌக்கமான மத்தியம காலம்) |
| | மத்தியம | - | மத்தியம் | (மத்தியம காலம்) |
| | மத்தியம | - | துரிதம் | (துரிதமான மத்தியம காலம்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 3. | துரித | - விளம்பம் | (சுமார் துரித காலம்) |
| | துரித | - மத்தியம் | (துரித காலம்) |
| | துரித | - துரிதம் | (அதி துரித காலம்) |

மேலும் மார்க்கம் பகுதியில் வரும் 6 காலங்களுக்குச் சத்காலம் (ஷட்காலம்) என்று பெயர். இதற்கு அதிஅதி விளம்பித காலம், அதி விளம்பித காலம், விளம்பித காலம், மத்தியம காலம், துரித காலம், அதி துரித காலம் என்று பெயர்.

சிலப்பதிகாரம் 4 வகை இயக்கத்தை (லயத்தை) முதனடை, வாரம், கூடை, திரள் என்கிறது. இதில் முதல்நடை என்பது மிகவும் தாழ்ந்த செலவினை (லயத்தை) உடையது. (சா) வாரநடை என்பது இசைக்கு மிகவும் ஏற்றதால் (சாரீ இதில் தேவாரம் பாடப்பட்டது. கூடை நடை என்பது சற்று விரைவானது (சரிகம). திரள் நடை என்பது மிகவும் முடுகின நடையினை உடையது (சரிகமபதநிச). இசைப் பயிற்சிக்கான அப்பியாசப் பயிற்சி வரிசைகள் இந்த நடையிலேயே 1,2,3,4 காலங்கள் (லயங்கள்) போதிக்கப்படுவது அனுபவ உண்மையாகும்.

## 9. யதி (அமைப்பு) :-

ஒரு தாளத்தின் அமைப்பில் உள்ள அங்கங்களைப் பல வகைகளில் விவசரித்துக் காட்டும் முறைக்கு யதி என்று பெயர். இது தாளத்தின் அல்லது பாட்டின் அமைப்பிலுள்ள ஒரு குறிப்பிட்டவகை அணியைக் குறிக்கும். ஒரு தாளத்தின் அமைப்பிலுள்ள அங்கங்களைப் பல வகை அமைப்புகளில் இது பிரத்தாரம் செய்து காட்டுகிறது. சுருதிக்கு சுவரப் பிரத்தாரம் எவ்வளவு முக்கியமோ அது போல் தாளத்துக்கு யதி பிரத்தாரம் மிக முக்கியம். எனவே இது லயங்கள் பலவற்றை அழகாகத் தொகுக்கும் முறைகள் பற்றிய ஒலிக்கோலம் எனலாம். இது அதன் அமைப்பைப் பொறுத்து ஆறு வகைப்படும். (ஷட்யதி)

| | | | |
|---|---|---|---|
| 1. | சம யதி | 4. | சுரோதோவக யதி |
| 2. | விசம யதி | 5. | டமரு யதி |
| 3. | கோபுச்ச யதி | 6. | மிருதங்க யதி |

### 1. சம யதி

இதில் தாளத்தின் அங்கங்கள் சமமாய் வரும். எனவே நெட்டங்கமாயினும், குற்றங்கமாயினும் எறும்பு தாரையைப் போல் (பிபீலகம், பிபீலகம்) ஒரே விதமாக, சமமாய், முறையாய் வருவது.

| | | | | |
|---|---|---|---|---|
| தகதிமி | தகஜெனு | தகதன | ஜெனுதரி | கிடதக |
| சரிகம | ரிகமப | கமபத | மபதநி | பதநிச் |
| 4 | 4 | 4 | 4 | 4 |

(எ.கா) கருணைக் கடலே எனத் தொடங்கும் வர்ணத்தின் சிட்டை சுவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| கமபம | பதபம | ககதம | கரிசநி |
| கரிசநி | நிநிதநி | ரிகரிப | மகதப |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. விசம யதி

இதில் எல்லா அங்கங்களும் முறை (கிரமம்) தவறிக் குறுகியும், பெருகியும் வரும். எனவே, இது ஓர் ஒழுங்கின்றி இருக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தகதரிகிடத | த | தக | தகதிமி | ததின |
| சரிகமபதநிச | ச | சரி | சரிகம | சரிக |
| 8 | 1 | 2 | 4 | 3 |

## 3. கோபுச்ச யதி

இது பசுவின் வாலைப் போன்று ஆரம்பத்தில் அகலமாகவும், பின்பு குறுகிக் கொண்டே போகும் அமைப்பினை உடையது. முதலிலே நெட்டங்கமும், ஈற்றிலே குற்றங்கமுமாக அடி பெருத்தும், நுனி சிறுத்தும் வருவது.

| | | | | |
|---|---|---|---|---|
| தகதரிகிடதக தகஜெனு | தகதரிகிடதக | தகஜெனு | தக | த |
| 12 | 8 | 4 | 2 | 1 |

(எ.கா) முத்துசுவாமி தீட்சிதரின் ஆனந்தபைரவி கிருதியில்.

தி யா கராஜ யோக வைபவம்
ஆகராஜ யோக வைபவம்
ராஜ யோக வைபவம்
யோக வைபவம்
வைபவம்
பவம்
வம்

பின்வரும் தேவாரப்பாடல் இந்த குறைப்பு யதி அமைப்பில் அமைந்துள்ளது.

மயிலாட மான்கன்று துள்ள வரிக்கெண்டை பாயச் சுணைநீல மொட்டலரும்
மான்கன்று துள்ள வரிக்கொண்ட பாயச் சுணைநீல மொட்டலரும்
வரிக்கெண்டை பாயச் சுணை நீல மொட்டலரும்
சுணை நீல மொட்டலரும்
மொட்டலரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சுரோதோவக யதி

இது ஆற்றின் நீரோட்டத்தைப் போன்று துவக்கத்தில் குறுகியும், பின்பு விரிந்து கொண்டே போகும் அமைப்பை உடையது. முதலிலே குற்றங்கமும், ஈற்றிலே நெட்டங்கமுமாக அடி சிறுத்தும், நுனி பெருத்துவம் வருவது.

| ஜெம் | தக | தகதரி | கிடதகதகதிமி | தகதிகு ததிங்கினதொம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 8 | 12 |

(பாடல்)

எவ்வரே
சரி எவ்வரே
சாமிகி சரி எவ்வரே
ம சாமிகி சரி எவ்வரே
ரா ம சாமிகி சரி எவ்வரே

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடு பால் முறையாலே என்னும் திருஞானசம்பந்தரின் பாடல் இன்றும் நிறைப்பு யதி அமைப்பில் பாடப்பட்டு வருகின்றது.

(பாடல்)

முறையாலே
தேனொடு பால் முறையாலே
இங்கேவா தேனொடு பால் முறையாலே
மடக்கிளியே இங்கேவா தேனொடு பால் முறையாலே
சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடு பால் முறையாலே.

## 5. | மரு யதி (வேதமத்தியம யதி)

இது முதலிலும் இறுதியிலும் நெட்டங்கமும், இடையில் குற்றங்கமும் வருவது. தொடக்கத்தில், விரிந்தும், பின் குறுகி இடைவரை சென்று. முடிவில் தொடக்கத்திலிருந்ததைப் போன்றே விரிவைப்பெற்றிருக்கும். அதாவது உடுக்கையைப்போல் நடு சிறுத்து, ஈறுகள் பெருத்த யதி.

| தகதரிகிடதக | தக | தகதரிகிடதக |
|---|---|---|
| 8 | 2 | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எ.கா)

தாளத்தில்

தகதிமி ததிங்கிணத்தோம்
தகிட தகதிமி
தக தகிட
தகதிமி
தகிட
தகதிமி
தக தகிட
தகிட தகதிமி
தகதிமி ததிங்கிணத்தோம்

கற்பனை சுவரத்தில்

ச் த ப க ரி ச
த ப க ரி ச
ப க ரி ச
க ரி ச
ரி ச
க ரி ச
ப க ரி ச
த ப க ரி ச
ச் த ப க ரி ச

## 6. மிருதங்க யதி

இது மிருதங்கம் என்ற தாளவாத்தியத்தைப் போல நடுவில் அகன்றும் இருபக்கங்களிலும் குறுகிச் செல்லும் அமைப்பைக் கொண்டது. இதில் முதலிலும் இறுதியிலும் குற்றங்கமும், இடையில் நெட்டங்கமுமாக ஈறுகள் சிறுத்து, நடுபருத்த யதியாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஜெம் | தஜெம் | தகதரிகிடதக | தஜெம் | ஜெம் |
| 1 | 2 | 8 | 2 | 1 |

தாளத்தில்

தகிட
தகதிமி
தக த கிட
தகிடதகதிமி
தக த கிட
தகதிமி
தகிட

காம்போதி வர்ணத்தில்

பதநி
மப தநி
கமப த நி
ரி கம பத நி
கமப த நி
மப தநி
பதநி

இதில் சங்கீதரத்னாகரம் சமயதி, கோபுச்சயதி, சுரோதோவக யதி என்னும் மூன்று யதிகளைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகின்றது. எனவே மற்ற யதிகள் எல்லாம் பிற்காலத்தில்தான் தோன்றியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. பிரஸ்தாரம் (விரிவு)

பிரத்தாரம் என்றால் பரவுதல் அல்லது விரிவு செய்தல் என்று பொருள். தாள் முழுக்குக் கருவிகளை இசைக்கும் போது ஒரு நாள் ஆவர்த்தன வட்டத்திற்குள். அல்லது ஒரு காலப் பிரமாண அளவிற்குள் அடங்கிப் பலவகையாக விரிந்து, வகை வகையான விகற்பங்களை உண்டாக்கி வருவன யாவற்றையும் பிரஸ்தாரம் என்று அழைப்பர். இது தாளத்தின் மொத்தக் கால அளவை மாற்றாமல் தாள அங்கங்களைப் பல வகையாக மாற்றி அமைக்கும் முறை.

சதுஸ்ர வகுவை நாம் உதாரணமாக எடுத்துக் கொண்டால், அதைக் கீழ்க்கண்டவாறு 8 வகைகளில் பிரஸ்தாரம் செய்துக் காட்டலாம்.

1. லகு (4)
2. துருதவிராமம் – அணுதுருதம் (3+1=4)
3. அனுதுருதம் + துருத விராமம் (1+3=4)
4. துருதம் + துருதம் (2+2=4)
5. துருதம் + அனுதுருதம் + அனுதுருதம் (2+1+1=4)
6. அனுதுருதம் +அனுதுருதம் + துருதம் (1+1+2=4)
7. அனுதுருதம் + துருதம் + அனுதுருதம் (1+2+1=4)
8. அனுதுருதம் + அனுதுருதம் +அனுதுருதம் + அனுதுருதம் (1+1+1+1=4)

எனவே, மேற்கண்ட தாளத்தின் 10 உயிர்த்தன்மைகளும் தாளங்களுக்கு உயிரோட்டத்தையும், சிறப்பையும், அழகையும் கொடுக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



























# Schon ein ganz kleines Lied kann viel Dunkel erhellen.

*Franz von Assisi*

Lieber Dennis,

Du hast uns in den Jahren, seitdem wir Dich alle kennen,

immer wieder mit Deiner Stimme und Deinen gefühlvollen Liedern begeistert.

Egal wo Du auf der Bühne stehst,

fesselst Du die Menschen und berührst Sie sehr.

Wir sind stolz auf Dich,

dass Du Deinem musikalischen Weg jetzt in Indien

den berechtigten Höhepunkt verleihst.

Wir können nicht dabei sein um Dich zu unterstützen,

aber sei Dir sicher, dass wir Dir alle unsere Daumen drücken

und Dir nur das Beste für diesen großen Tag wünschen!

Wenn Du doch ein wenig aufgeregt sein solltest,

dann denk daran, wie wir Dich immer lautstark angefeuert haben

und stell Dir vor, dass wir da sind!

In Diesem Sinne…

Mach das Beste daraus!

Wir denken an Dich!

In Liebe Deine Freunde aus Deutschland!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் – தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்

(தாய் தன் மகனை பெற்றெடுத்த போது அடைந்த மகிழ்ச்சியை விட அவன் அனைத்து
நற்குணங்களிலும் உயர்த்த சான்றோன் என்று கேள்விப்படும் பொழுது மிகுதியும் மகிழ்வாள்)



மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்

(மகன் தன் தந்தைக்கு செய்யும் உதவி இவனுடைய தந்தை இவனை பெறுவதற்காக
என்ன தவம் செய்தானோ என்று மற்றவரால் சொல்லப்படும் புகழுரையாகும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Aavanaham Foundation
noolaham.org | aavanaham.org